707

தொகுதி 6. [illegible] 927 ஆம் டி

மனமோகினி

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

[illegible] பிரசுரகர்த்தர்
[illegible] சாமி முதலியார்,
[illegible] நிலையம், சென்னை.

JL.
[illegible], N22 [illegible]
N27.6.11.
186521

கி னி

...ாவல் சஞ்சிகை.

...லகளே வெளிவரும். நாவலுக்கென்றே ...ளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட் ...ாகக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை ...ல் பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். ...தில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927௵ ஜனவரி௴த்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற ஏப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. பிறகு கடற்கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி முதல்பாகம் முடிவுபெற்று இப்பொழுது 2-ம் பாகம் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927௵ ஜனவரி௴த்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ.2—12—0 அனுப்பிவிட்டால் அந்தச் சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928௵ ஜனவரி௴ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	1...	
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 1-ம் பாகம்	,,	1	8	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதரா...

1928

மற்றவன்:—நல்ல காரியம் செய்தாய். கப்பலின் பாய் மரங்களை யறுத்துவிட்டுக் கொளுத்திவிட்டிருந்தால் மிக்க நேர்த்தியாக விருந்திருக்கும். ஆயினும் இப்போது நாம் ஆலோசிக்க வேண்டிய விஷயம் அதுவல்ல. சமயோசித புத்தியும் கப்பலை யாபத்து வேளையில் நடத்தக் கூடிய சாமார்த்தியமும் யுத்தம் நேர்ந்த போது பூரண தைரியத்தோடு முன் நின்று நடத்தும் வல்லமையும் உடைய காப்டென் குலசேகரனை இழந்து விடுவதா என்பதே. அப்படிச் செய்வது மிக்க மூடத்தனமென்றே யெனக்குப் புலப்படுகிறது. அதோடு தன்னிடம் உண்மையான அன்பும் நம்பிக்கையுமுடைய நண்பர்களின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு அவர்களை விட்டுப்பிரிந்து போவது நமது காப்டென் குலசேகரனுக்கும் தகுதியல்லவென்பதே யென் தாழ்ந்த அபிப்பிராயம். இப்போது நமக்கு நல்ல ஜலம் கிட்டத்தட்ட ஆய்விட்டது. உணவுப் பொருள்களோ மிக்க கொஞ்சமே யிருக்கின்றன. நாம் ஆகாரம் சேகரித்துக் கொள்ளாமல் இந்த விடத்தை விட்டுப் புறப்படமுடியாது. இவ்வூராரின் அன்பில்லாமல் உணவுப் பொருள்கள் கிடைக்காது. நாம் இன்னும் கொஞ்சகாலம் இங்கிருந்தால் "வேட்டைக்காரன்" என்ற யுத்தக்கப்பல் நம்மைப் பிடித்துக் கொள்ளும். இரண்டு நாட்களுக்கு முன் அது நம்மைத் தெற்குத் தீவில் கண்டது. எந்தச் சமயத்திலும் அது இங்கு வந்துவிட லாகும். அதனிடம் அகப்பட்டால் நாம் கயிற்றின் முனையில் தொங்க விடப்பட்டு உலர்த்திப் பதன் செய்யப்படுவோம்; (அதாவது தூக்கில் போடப்படுவோம் என்று அர்த்தம். எப்படியெனில்,

186521

அத்தேசங்களில் சாதாரண வழிப்பறி கொள்ளைக் காரருக்கே மரணதண்டனை விதிக்கப்படுவது சட்டம். கப்பற்கொள்ளைக்காரர்கள் தூக்கிற் போடப்பட்டு மற்றவர்கள் பார்த்து அத்தகைய குற்றத்தைச் செய் யாது எச்சரிக்கை யடையுமாறு அவர்கள் சவங்கள் பல நாட்கள் அப்படியே தூக்குமரத்தில் தொங்க விடப்பட்டிருக்கும்) இப்போது காப்டென் குலசேக ரனே நம்மை இத்தகைய ஆபத்தினின்றும் காப்பாற் றத் தக்கவன். அவன் இந்த ஊராரிடம் அவர்களுக் குத் தக்க பெரிய மனிதத் தராவாய், சினேக பாவத் தோடு நடந்துகொண்டு காரியசித்தி பெறுவான். அப்படி அவர்களுக்கு விரோதமாய்த் திரும்பவேண் டிய அவசியம் நேர்ந்தாலோ அதற்கும் அவனுக்குத் தக்கப் பூரண சாமார்த்தியமிருக்கிறது" என்றான்.

மாலுமிகளில் மிக்க வயோதிகனும் ஒற்றைக்கண் ணுடையவனுமாகிய ஒருவன் எழுந்து நின்று சற்று ஆத் திரத்தோடு "அப்படியானல் காப்டென் கோபாலை யொழித்து விடவா பார்க்கிறீர்கள். அவன் அப்போதைக் கப்போது ஆத்திரத்தோடு அவசரப்பட்டு நடந்து கொள்வதாயினும் வெறியாலோ வேடிக்கையாகவோ என் ஒரு கண்ணைக்கெடுத்துவிட்டாலும், அவன் சத்தியவானே. அதற்காகவே நான் கடைசிவரையில் அவன் பக்கத்தில் நிற் பேன்" என்றான்.

அச்சுதன்:—"அடடா! நான் கூறுவதை முழுவதும் கேட் காமலே பேசுகிறாயே. இப்படிப் பேசுவதாயின் ஆளுக்கொரு ஆளைப்பற்றிப் பேசலாம். நான் கூறும் முடிவான ஏற்பாடு என்னவெனில் குலசேகரன் பகல் 12 மணிமுதல் விடியற்காலம் 5 மணிவரையில் கப்பித் தானாய் அதிகாரம் செலுத்தவேண்டும். அந்த வேளை

யில்தான் கோபாலன் வெறிக்கக் குடித்துவிட்டிருப் பது வழக்கம்" என்றான்.

அச்சுதன் கூறியதற்குச் சாட்சி பகர்வதுபோல் அச் சமயம் காப்டென் கோபாலன் அர்த்தமற்ற ஏதோ சில வார்த்தைகளைக் குழறிக்கொண்டே தன் கைத்துப்பாக் கியை யெடுத்து அச்சுதனுக்கு நேராய் நீட்ட முயன்றான்.

டக்கன்:—"இதோ பாருங்கள். இவனுக்கிருக்கிற புத்தி இம்மட்டே. சபைகூடும் சமயத்தில்கூட இழிவான கூலியாட்களைப்போல் குடித்துவிட்டு உளறுவான்" என்றான்.

அனந்தன்:—"ஏன் அவன் சபைகூடும் வேளையாயினும் சரி, கப்பல் புயற்காற்றில் அகப்பட்டுத் தத்தளிக்கும் போதும் சரி, எதிரிகளோடு யுத்தம் செய்யப்போ கும்போதும் சரி நன்றாகக் குடித்துவிட்டுத் தள்ளாடு வான்" என்றான்.

டக்கன் :—"கிடக்கட்டும். எப்படியாயினும் சரி, ஒரே நாளையில் இரண்டு கப்பித்தான்கள் அதிகாரம் செய் வது சரியல்ல. ஒருவர் ஒரு வாரமும் மற்றொருவர் இன்னொரு வாரமுமாக முறைப்படி வேலைசெய்வது யுக்தமென்றும் முதல்வாரம் குலசேகரன் இருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறேன்" என் றான்.

குலசேகரன் இவர்கள் கூறிய யாவும் கேட்டபின், "நண்பர்களே! இவ்வளவு அவசரப்படாமல் சற்று பொறுங் கள். என்னுடைய சம்மதமின்றியே என்னையே கப்பித் தானாக நியமிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன்" என் றான்.

அனந்தன் :—"ஓ! வானத்தில் ஒரு சூரியனிருப்பது எவ் வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் உன் அனு

மதியின்றியே யுன்னைக் கப்பித்தானாக நியமிப்போம்" என்று உறுதியாய்க் கூறினான்.

குலசேகரன் பார்த்தான். இச்சமயம் அவர்கள் சகாயம் தனக்கு வேண்டியதாயிருக்கிறது. அதோடு அம் முரடர்களின் பிரியத்திற்கு மாறாக நடக்க அச்சமயம் முடியாது. ஆகையால் சாந்தமாகவே அவர்களை நோக்கி, "நண்பர்களே! ஆயினும் என் மனுவையேனும் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்புவதாலும் என் உதவியின்றி நீங்கள் இந்த 'இக்கட்டினின்றும் தப்புவது கஷ்டம் என்று தோன்றுவதாலும் உங்கள் பிரியப்படிக்கே கப்பித்தானாக விருக்க நான் ஒப்புக்கொள்ளுகிறேன்........" என்றதே.

அனந்தனும் மற்றவர்களும் "கப்பித்தான் குலசேகரன் வாழி வாழி" என்று கோஷ்டமிட்டார்கள் குலசேகரன், "அவசரப்படவேண்டாம். பேசாமல் நான் கூறுவதை முழுமையும் கேளுங்கள். நான் கப்பித்தானாயிருக்கச் சம்மதிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை-அதாவது, நான் கப்பலுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள், சுத்த ஜலம் யாவும் சேகரித்துக் கப்பலைப் பிரயாணத்திற்கு ஆயத்தமாக்கி இதைவிட்டுப் புறப்பட்டபின், தூரத்திலுள்ள ஒரு தீவில் என்னை யிறக்கிவிடுங்கள். நான் கடைசி வரையில் உங்கள்கூடவே யிருப்பதால் பிரியப்பட்டாலும் உங்களைக் காட்டிக்கொடுக்க முடியாது" என்றான்.

உடனே அவ்விஷயத்தைப்பற்றி அவரவர்கள் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. யாவர்க்கும் குலசேகரனுடைய கப்பல் செலுத்தும் சாமார்த்தியத்திலும், தைரியத்திலும் மிக்க நம்பிக்கை யுண்டாதலின் யாவரும் அந்த ஏற்பாட்டிற்கு ஏகோபித்து ஒப்புக்கொண்டார்கள். மறுநாள் காலை முன் இரவு வெறிக்கக் குடித்து ஸ்மரணையற்று

நடந்த சங்கதி யொன்றும் தெரியாமலிருந்தவர்கள்கூட, காலையில் நடந்த சங்கதிகளைக் கேட்டபின் குலசேகர னுடைய சாமார்த்தியத்தில் நம்பிக்கைவைத்து அந்த ஏற் பாட்டை யொப்புக்கொண்டார்கள். காப்டென் கோபாலன் தன் பட்சத்திலிருந்த ஆட்கள்கூட இப்போது குலசேகர னுக்கு அனுகூலமாய்த் திரும்பிவிட்டதைக் கண்டு "இச் சமயம் நாம் மறுத்துப் பேசலாகாது. நமக்குத் தக்க சம யம் வாய்க்குமட்டும் நாம் யாவற்றிற்கும் பொறுமையாய் உடன்பட்டே யிருக்கவேண்டும்'' என்று தனக்குள் தீர் மானித்துக்கொண்டான். கொள்ளைக்காரரின் கப்பலில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வது சுபாவம். எத்தகைய கப்பித்தானுக்கும் நித்தியகண்டமே யெனலாம். ஏனெ னில் கொள்ளைக் கப்பலில் சேர்ந்திருப்பவர்களெல்லாம் அயோக்கியர்களே. அவர்களனைவரும் ஒன்றுசேர்ந்து கொண்டால் ஒரு மனிதனுக விருப்பவன் கப்பித்தானுக விருந்தாலும் என்ன செய்யலாகும். எத்தனையோ கப்பித் தான்கள் நிர்மானுஷியமான தீவில் விட்டுவிடப்பட்டிருக் கிறார்கள்.

குலசேகரன் சிந்தித்துப் பார்த்தான். "நமது நிபந் தனைப்படி யிவர்கள் சம்மதித்துக் கொண்டவரையில் இனி நாம் பின்னிடையலாகாது. இதை யொப்புக்கொள்கிற வரையில் உடனே சுறுசுறுப்பாய் வேலைசெய்ய வேண்டி யதே. கப்பலை முன்னே ஆபத்தினின்றும் காப்பாற்ற வேண்டும்'' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு உடனே கரைக்குச் செல்லப் படகை யாயத்தம் செய்யும் படி கட்டளையிட்டான். தன்னுடுகூட பலசாலிகளாகிய பன்னிரண்டு பேரைப் பொறுக்கியழைத்துக்கொண்டான். யாவரும் மிக்க நாணயமான உடையணிந்து, பூரண ஆயுத பாணிகளாக வரும்படி கட்டளையிட்டான். அவர்கள்

கொள்ளையடிப்பதே தொழிலாகையால் விலையுயர்ந்த நாணயமான உடைகளுக்குக் குறைவில்லை. ஒவ்வொருவனும் கைத்துப்பாக்கி, உடைவாள் குத்தீட்டி முதலிய ஆயுதங்களை யணிந்து கொண்டே புறப்பட்டார்கள்.

குலசேகரனே மிக்க உயர்தரமான உடையணிந்து கொண்டான். அப்பிரதேசங்களில் மிக்க செல்வவந்தர்களாகிய பிரபுக்களே யவ்வளவு விலையுயர்ந்த உடையணிவார்கள். அவன் உடைகள் யாவும் பட்டில் பொற்சரிகை வேலை செய்தவைகளே. கழுத்தில் ஒரு கனத்த பொற் சங்கலியை மூன்று நான்கு சுற்று போட்டுக்கொண்டிருந்தான். அதன் ஒரு முனையில் பொன்னால் செய்யப்பட்ட ஒரு ஊதுகுழல் இருந்தது. அதுவே கப்பித்தானுடைய அதிகாரத்தின் அறிகுறியாகும். அவனுடைய துப்பாக்கி கத்தி இவற்றின் கைப்பிடிகளில் இரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. இத்தகைய ஆடம்பரமான உடையோடு அவன் கப்பலின் மேல் தட்டிற்குச் சென்றான்.

52-வது அத்தியாயம்

குலசேகரன், இயற்கையாகவே அழகிய கம்பீரம் பொருந்திய வதனமுடையவன் ஆகையால் அவன் இப்போது அணிந்திருந்த உடை அவன் உருவத்தை மிக்க வசீகரப்படுத்திற்று. ஆகையால் மேல் தட்டில் அவனைக் கண்டவுடனே கப்பலாட்கள் அனைவரும் மிக்க குதூகலத்தோடு ஆரவாரித்தார்கள்.

குலசேகரன் தான் செல்லும் படகில் காப்டென் கோபாலையும் அழைத்துச் சென்றான். கோபாலனும் கம்பீரமான உடையே யணிந்திருந்தான். ஆனால் அவன் விகாரம் பொருந்திய கடுகடுப்பான முகமுடையவனாத

லின், சற்றும் நாகரீகமென்பதையே யறியாத குரூபியாகிய ஒரு காட்டாளுக்கு இராஜனுடைய உடையணிந்தாற்போ லிருந்தது காப்டென் கோபாலன் உருவம். குலசேகரன் அவனைக் கூடவழைத்துக்கொண்டு போனதற்கு ஒரு இரக சியமான காரணமுமுண்டு. அதாவது தான் கரையில் சென்றிருக்கும் சமயத்தில் அவன் கப்பலிலுள்ள ஆட்களுக் குத் துர்ப்போதனைசெய்து அவர்களைத் தனக்கு விரோதிக ளாக்காமல் தடுப்பதற்காகவே. இவர்கள் படகிலேறிச் சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டே சீக்கிரத்தில் கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

குலசேகரன் திரும்பி வருமட்டும் கப்பல் அனந்தன் வசம் ஒப்புவிக்கப்பட்டது. குலசேகரனுக்கு அவனிடம் பூரண நம்பிக்கையுண்டு. அவனுக்கு ஒருபோதும் துரோ கம் செய்யான் என்று தெரியும். தான் கப்பலைவிட்டுப் புறப்படுமுன், தான் திரும்பி வரும் வரையில் அவன் எவ் வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பதைப்பற்றிக் குல சேகரன் இரகசியமாய் அவனுக்குக் கூறியிருந்தான்.

கடைசியில் கோபாலனுடைய ஆட்களைப்பற்றியும் ஊராரைப்பற்றியும் மிக்க ஜாக்கிரதையாக விருக்கவேண்டு மென்பதைப்பற்றி பன்முறை கூறிய பிறகே, குலசேகரன் படகு கப்பலை விட்டுப் புறப்பட்டது. இவர்கள் படகு கரையோரமிருக்கும் துறை முகத்தை நெருங்கியதும் குல சேகரன் வெள்ளைக் கொடியை நாட்டினான். கரையை நோக்கியபோது அங்கிருந்த ஜனங்களுக்குள் குழப்பமாக விருந்தது புலப்பட்டது. ஜனங்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். சிலர் ஆயுதங்களைக் கையில் எடுத் துக் கொண்டிருந்தார்கள். கோட்டையிலிருந்த பீரங்கி களுக்கு ஆட்கள் துரிதமாயனுப்பப்பட்டார்கள். இவை அபாயகரமான குறிகளென்று குலசேகரன் நன்கறிவான்.

அங்கிருக்கும் பீரங்கிகளுக்கு ஆட்கள் அமர்த்தப்பட்டிரா விடினும், வேலையினின்று நீங்கி இளைப்பாறுகிற போர் வீரர்களில் பலர் பீரங்கித் தொழிலறிந்தவர்களிருக்கிறார்கள். அவர்கள் இத்தகைய சமையத்தில் நகர அதிகாரிகளுக்கு, ஊராருக்கு உதவிசெய்ய முன் வருவார்கள். இந்த விஷயம் குலசேகரனுக்கு நன்றாய்த் தெரியும்.

விரோதபாவனையில் செய்யப்படும் இத்தகைய ஏற்பாடுகளையெல்லாம் குலசேகரன் மிக்க ஜாக்கிரதையோடு கவனித்தான். ஆயினும் தன் முகத்தில் சற்றேனும் சந்தேகமாவது கலக்கமாவது காட்டாமல் தன் படகை இறங்கு துறையோரம் இருக்கும் படிகளருகிற் செலுத்தினான். கரையோரத்தில் அனேகம் மனிதர் துப்பாக்கி கத்தி ஈட்டி முதலிய ஆயுதங்களை யேந்தி யிவர்கள் கரையிறங்குவதைத் தடுக்க நினைப்பவர்கள்போல் காணப்பட்டார்கள். ஆனால் எப்படி நடந்து கொள்வதென்று தங்களுக்குள் ஒரு முடிவு செய்துகொண் டிருக்கவில்லை. ஆகையால் குலசேகரன் படகை ஓரத்தில் கொண்டுபோய் நிறுத்திக் கரையிலிறங்க ஆயத்தப்பட்டபோது முன்னே நின்று கொண்டிருந்த ஆட்களெல்லாம் பின்னிடைந்து இவர்கள் கரையிறங்க இடம்விட்டார்கள். குலசேகரன் இரண்டு பேரை மட்டும் படகிலேயே யிருக்கவிட்டு மற்ற பேர்களோடு கறையிலிறங்கினான். அந்த இரண்டு பேரும் படகையுடனே பின்னுக்குக் கொண்டு போய்விட்டார்கள். இந்த ஏற்பாட்டால் ஊரார் கப்பலுக்கிருக்கும் அந்த ஒரே படகைப் பிடித்துக் கொள்வதற்கில்லை. அதோடு குலசேகரன் அலட்சியமாய் நடப்பதாகத் தோன்றியதால் ஜனங்களுக்குக் கொஞ்சம் அச்சமுண்டாயிற்று.

ஆயினும் ஊரார் துப்பாக்கிகளைத் தோள்களின்மேல் வைத்துக்கொண்டு வீதிக்குள் நுழையும் வழிக்குக்

குறுக்கே நெருக்கமாய் நின்று கொண்டார்கள். குலசேகரன் சமயோசித புத்தியும், தந்திரமும் தைரியமுமுடையவனுகையால் தானே முதலிற் பேசத்தொடங்கி, "பெரிய மனிதர்களே! இதென்ன அதிசயம்? ஆரல் தீவாராகிய நீங்கள் வடநாட்டு முரடர்களாக மாறி விட்டீர்களோ என்ன? இவ்வளவு காலையிலேயே ஆயுதங்களை யேந்தி நிற்பதை நோக்க அப்படிக் கருத நேர்கிறது. அப்படித்தானே அல்லது என்னையும் என் கப்பலையும் கனப்படுத்தவெண்ணி இத்தகைய மரியாதை காட்டுகிறீர்களோ?" என்று கேட்டான்.

ஊரார் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினுர்கள். கடைசியில் ஒருவன் பேசத் துணிந்து குலசேகரனை நோக்கி "அய்யா! நீ யாரென்று எங்களுக்குத் தெரியாது. அதோ விருக்கிருரே அவர்தான் அக் கப்பலுக்குக் கப்பித்தானுயிருந்தார்" என்ருன்.

குலசேகரன் என் உதவி உத்தியோகஸ்தர். நான் இல்லாத வேளையில் அவர் கப்பித்தானுக விருப்பார். அதைப்பற்றி யிப்போதென்ன? நான் உங்கள் நகர அதிகாரியைக் கண்டு பேசவேண்டியிருக்கிறது.

அம்மனிதன்:—எங்கள் அதிகாரி நகர மண்டபத்தில் நியாயாதிபதிகளோடு சபைகூடியிருக்கிருர்.

குலசேகரன்:—மிக்க நலமாயிற்று. அவர்கள் எங்கே சபை கூடுகிருர்கள்?

அம்மனிதன்:—நகர சபாமண்டபத்தில்.

குலசேகரன்:—"அப்படியானுல் தயவுசெய்து வழிவிட்டால் நானும் என் ஆட்களும் செல்கின்ருேம்" என்ருன்.

அவன் மொழிகளைக் கேட்டதே ஜனங்களுக்குள் குசுகுசு வென்று சம்பாஷணை நடந்தது. சிலர் அவர்களை ஊருக்குள் செல்லவிடலாகாதென்ற வெண்ண முடைய

வர்களாக விருந்தார்கள். ஆனால் பெரும்பாலோர் துணிகரமான அந்த மாலுமிகளோடு சண்டையிடலாகாதென்று கருதினர்கள். கடைசியில் வெளியான விடத்தில் ஆயுதபாணிகளாகிய அவர்களோடு சண்டையிடுவதைவிட அவர்கள் சபாமண்டபத்திற்குள் நுழைந்தபின் சுலபமாய் அவர்களைப் பிடித்துக்கொள்ளலாம் என்று கருதினர்கள். இவ்வாறு யோசனை செய்துகொண்டபின் குலசேகரனும் அவன் ஆட்களும் நகருக்குள் செல்லும்படி வழிவிட்டுவிட்டார்கள்.

குலசேகரன் தன் ஆட்களை நெருக்கமாகவே நிறுத்தியழைத்துக்கொண்டு ஊர் ஜனங்கள் சமீபத்தில் நெருங்காதபடி ஜாக்கிரதையோடு சென்றான். தன் ஆட்களில் நால்வரைப் பின் காவலாக நிறுத்தி அவர்கள், அடிக்கடித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வரும்படி செய்தான். அச்சமயத்தில் அவர்களுக்குத் தீங்கு செய்ய முயல்வது மோசமாய் முடியுமென்று ஜனங்கள் அறிந்துகொண்டார்கள்.

இம்மாதிரியே அவர்கள் நெருக்கமான வீதியின் வழியாய்ச் சென்று நகர சபாமண்டபத்தைச் சேர்ந்தார்கள். மண்டபத்தில் ஜனங்கள் கூறியபடி நியாயாதிபதிகள் சபை கூடியிருந்தார்கள். குலசேகரனும் அவன் ஆட்களும் நகர மண்டபத்தில் நுழையும்போது ஜனங்கள் அவர்களை நெருங்கத் தொடங்கினர்கள். ஏனெனில் அங்கு அவர்களை நாற்புறங்களிலும் நெருங்கி அவர்கள் ஆயுதங்களையுபயோகிக்கவொட்டாமல் செய்தால் கூடியவரையில் அவர்களில் அனேகரைப் பிடித்துக் கொள்ளலாம் என்று கருதினர்கள்.

ஆனால் குலசேகரன் இவர்கள் நடக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். ஆகையால் சபாமண்டபத்தின் வாயிற் படியருகிற் செல்லும்போது அங்கிருந்தவர்களை

யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டுத் தன் ஆட்களில் நால் வரை யங்கு நிறுத்திவிட்டு அவர்கள் ஜனங்கள் பக்கம் திரும்பி ஆயுதங்களை நீட்டிக்கொண் டிருக்கும்படி செய் தான். அவர்களுடைய சிவந்த குரூரமான முகங்களையும் அவர்கள் கரத்தில் பற்றியிருக்கும் ஆயுதங்களையும் கண்ட ஜனங்கள் பீதியடைந்து பின்னிடைந்தார்கள்.

குலசேகரன் தன் மீதியாட்களோடு நகர மண்டபத் திற்குள் நுழைந்தான். அங்கு நியாயாதிபதிகளும் நகர அதிகாரியும் சபைகூடி யிருந்தார்கள். அவர்களோ மிகச் சொல்ப ஆட்களாகவே யிருந்தபடியால் அவர்கள் குல சேகரனிடம் சிக்சிக்கொண்டமாதிரியே. வெளியிலுள்ள வர்கள் இவர்களுக்கு உதவிசெய்ய முடியாது.

நியாயாதிபதிகள் முதலியவர்கள் தங்கள் அபாயகர மான நிலைமையை யுணர்ந்து ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினர்கள். அவர்கள் மனதில் குழப்பமுண்டாயிற்று. குலசேகரன் அவர்களை நோக்கி "கனவான்களே! நமக்குள் எவ்வித மனஸ்தாபமுமில்லையென்றே நம்புகிறேன். நான் அதோ துறைமுகத்திலிருக்கும் எங்கள் கப்பலுக்கு ஆகா ரம் சேகரம் செய்யும் விஷயமாய் இங்கு வந்தேன்; உணவுப் பொருளின்றி நாங்கள் செல்ல முடியாதன்றோ" என்றான். அறிவாளியும் தைரியசாலியுமான நகர அதிகாரி "கப்பலா? ஐயா! நீர் அக்கப்பலின் கப்பித்தான் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றார்.

குலசேகரன்:—"என்னை நன்றாய் உற்றுநோக்குங்கள். அதன் பிறகு மறுபடி இக்கேள்வியைக் கேட்க மாட்டீர்களென்று நம்புகிறேன்" என்றான்.

நியாயாதிபதிகள் அவ்வாறே யவனை நோக்கியதும் அத்தகைய விஷயத்தைப்பற்றிக் கேட்பது அனுவசியமே யென்று அறிந்து அதைவிட்டுவிட்டு, "அக்கப்பல் உம்

முடையதாயின் அது எங்கிருந்து வருகிறது? எங்கு செல்கிறது? உன்னை நோக்கினல் ஒரு வர்த்தகக் கப்பலின் தலைவன் என்பதைவிட ஒரு போர்க் கப்பலின் உத்தியோகஸ்தன் என்றே கருதலாகும். ஆனல் நீ இந்திரபுரி யுத்தக் கப்பல்களைச் சேர்ந்தவனல்லவென்று எங்களுக்குத் தெரியும்" என்ருர்.

குல:—"இந்திரபுரி யுத்தக்கப்பல்களன்றி வேறு எத்தனையோ அன்னிய நாட்டுக் கப்பல்கள் கடலில் சஞ்சரிக்கின்றன. நான் ஒரு வர்த்தகக் கப்பலைச் சேர்ந்தவனுக விருப்பதாலேயே நீங்கள் எனக்கு உணவுப் பொருள்களளிக்காமல் என்னை வெறுப்போடு நடத்தலாகுமோ? என் பணத்திற்கு உணவுப்பொருள்களளிக்கும்படி தானே நான் கேட்கிறேன்" என்ருன்.

அதன்பிறகு இவர்கள் யோக்கியதையைப் பற்றிச் சற்று நேரம் சந்தேகமாய்ப் பேசியபின் நகர அதிகாரி "ஓ காப்டென்! நீயே நேற்று இங்கு சுந்தரம்பிள்ளை யென்பவருடைய கடையில் நடந்த குழப்பத்தில் தலைவனுக விருந்து சச்சரவு நடத்தி போலீஸாரால் சிறைசெய்து நீ கொண்டுவரப்பட்டபின் துராக்கிரதமாய் உன் ஆட்களின் உதவியால் தப்பித்துக்கொண்டு போய்விட்டாய். ஆகையால் உங்களுடைய நடக்கையைப் பற்றிச் சரியாகத் தெரிகிற வரையில் உங்களுக்கு உணவுப்பொருள்களளிக்க முடியாது. நீங்கள் ஏதேனும் மிரட்ட முயன்ருல் இதோ இந்த கைக்குட்டையைச் சாளரத்தில் காட்டி யாட்டினல் உங்கள் கப்பல் மறு நிமிடம் கடலில் முழுகடிக்கப்படும். உங்கள் கப்பல் கோட்டையிலிருக்கும் எங்கள் பீரங்கிகளின் வாய்க்கு நேராக விருக்கிறது" என்ருர்.

குலசேகரன் தற்செயலாய் "ஆம். உங்கள் பீரங்கி

களில் எத்தனைக்குக் காதிருக்கிறது?" என்று கேட்டான். உடனே நகர அதிகாரியின் முகத்திலுண்டான கலக்கத்தால் அவர்கள் பீரங்கிகள் நல்ல நிலைமையிலில்லையென்றறிந்து கொண்ட குலசேகரன் அதிகாரியை நோக்கி,

"ஐயா மிரட்டல் தங்களிடம் எப்படிச் செல்லாதோ அப்படியே நம்மிடமும் செல்லாது தங்கள் பீரங்கிகள் அவற்றைக் கையாடும் ஆட்களுக்கே ஆபத்தை யுண்டாக்குமே யன்றி எங்கள் கப்பலை யொன்றும் செய்யமுடியாது. தாங்கள் நல்ல அறிவாளியென்று நான் கேள்விப்படுகிறேன். ஆகையால் நாமிருவரும் ஐந்து நிமிடங்கள் சம்பாஷித்தால் இவ்விஷயத்தை ஒரு ஒழுங்காக முடிவுசெய்து கொள்ளலாம்" என்ருன்.

அதிகாரி: "நல்லது, நீ என்ன கூறுகிருயோ கேட்கிறேன். இதோ இப்படி வா" என்று ஒரு சிறு அறைக்கு அழைத்துச் சென்ருர். குலசேகரன் அவர் பின்னுல் அந்த அறைக்குட் சென்றதும், அவர் தன் கையிலிருக்கும் துப்பாக்கியை யுற்று நோக்குவதைக் கண்டு, "ஐயா! நான் கரத்தில் துப்பாக்கியை வைத்துக்கொண்டிருப்பதால் தங்களுக்கு அச்சமாயிருந்தால் இதோ அதை மடியில் வைத்துக்கொள்கிறேன்" என்ருன்.

அதிகாரி:—"உன் துப்பாக்கிக்கு நான் அஞ்சவில்லை. நான் சைனியத்தில் சேவகம் செய்திருப்பதால் துப்பாக்கிக்கு அஞ்சுகிறவனல்ல" என்ருர்.

குலசேகரன்:—"ஆனவரையில் நலமே. ஏனெனில் நான் கூறுவதை நிதானமாகக் கேட்பீர். இப்போது நாங்கள் நீர் சந்தேகப்படுகிற நடக்கையுடையவர்களாகவே யிருக்கட்டும். அல்லது வேறு எப்படியாகவேனு மிருக்கட்டும். எங்களை யிங்கிருந்து செல்லவொட்டாது வைத்துக்கொண்டிருப்பதால் வீணுன அடியும்

குத்துமன்றி வேறு உமக்கு என்ன இலாபம் கிடைக்கும்? சண்டைக்கோ உண்மையில் உங்களைவிட நாங்கள் பூரண ஆயத்தமாகவும் பலமுடையவர்களாகவுமிருக்கிறோம். இருக்கிற விஷயம் வெள்ளையாகவே தெரிகிறது. நாங்கள் இதைவிட்டுப் போய்விட வேண்டுமென்பதே உமது விருப்பம்; எங்களுக்கும் போகவே பிரியம். ஆகையால் எங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை யளிக்க ஏற்பாடு செய்து விடும். நாங்கள் உடனே யிதை விட்டுக் கிளம்பி விடுகிறோம்'' என்றான்.

நகர அதிகாரி:—"இதோ பாரும் கப்பித்தான். நான் ஒருவர்க்கும் தீங்கிழைக்கக் கருதவில்லை. நான் என் காலத்தில் பார்த்த கப்பல் கொள்ளைக்காரர்களில் நீ மிக நல்லவன். ஆகையால் நீ இதைவிட ஒரு நல்ல தொழிலில் பிரவேசிப்பது நலம் என்று கருதுவது தப்பல்ல. நீ பணமளித்து உனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு க்ஷேமமாய் இதைவிட்டுச் செல்லலாகும். ஆனால் ஒரு வம்பிருக்கிறது. அதாவது இந்திரபுரி யுத்தக்கப்பல் ஒன்று இங்கு எந்த நிமிடத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. அக்கப்பல் வந்து உங்களைக் கண்டுவிட்டாலோ உடனே வந்து வளைத்துக்கொள்வார்கள்............'' என்றதே,

குலசேகரன்:—"வளைத்துக்கொள்வார்கள், எங்களைக் கப்பலோடு முழுக்கடித்துவிடுவார்கள்...'' என்றான்.

நகர அதிகாரி :—"அந்த விஷயம் உங்கள் சந்தர்ப்பப்படி நடக்கும். அதைப்பற்றியல்ல நான் கூறவந்தது. அப்புறம் அவர்களுடைய விரோதிகளாகிய உங்களுடன் சினேகமாகவிருந்து உங்களுக்கு உணவுப்

பொருள்கள் முதலியவற்றை யளித்த எங்கள் கதி என்னகும். நகரத்தின்மேலேயே பீரங்கிப்பிரயோகம் செய்வார்கள். பிறகு நகர அதிகாரி தப்புவது கஷ்டமாகவே முடியும்" என்ருர்.

குலசேகரன்:—"நல்லது உங்களுக்குப் பீதி எங்கே யிருக்கிறதென்று தெரிந்துகொண்டேன். ஆகையால் நாங்கள் இத்தீவைச் சுற்றிக்கொண்டு சிறு நகர் துறைமுகத்திற்குச் செல்லுகிருேம். அவ்விடத்திற்கு எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யனுப்பி விடுங்கள். அப்போது தாங்களாவது இத்தீவாராவது அதில் சம்பந்தப்பட்டதாகச் சற்றும் தோன்ருது. அப்படியவர்கள் தங்களைக் கேட்டாலும் "எங்களிடம் தக்க ஆயுத பலமும் ஆட்பலமுமில்லை. அவர்கள் பூரண ஆயுதபாணிகளாகவும் பலம் பொருந்திய ஆட்களாகவும் இருக்கிருர்கள். அப்படியிருக்க நாங்கள் விலைக்குப் பண்டங்களையளிக்க மறுத்திருந்தால் வீணுக எங்களில் பிராணச்சேதம் நேர்வதோடு எங்கள் பொருள்களும் சூறையாடப்பட்டிருக்கும். அச்சமயத்தில் உங்களைப்போன்ற உதவி எங்களுக்கிருந்திருந்தால் நாங்கள் சரியாகவே நடந்துகொண்டிருப்போம் என்று கூறுங்கள்" என்ருன்.

அதிகாரி:—"அது ஒரு வழிதான். நான் இப்போது உங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யளித்து இங்கிருந்து செல்லும்படி யனுப்பி விடுவதாயின் உங்களால் இவ்வூருக்கு ஒரு தீங்கும் நேராதென்பதற்கு ஒரு பொறுப்பு வேண்டுமே" என்ருர்.

குலசேகரன் "நீங்கள் இந்திரபுரி யுத்தக்கப்பல் வருமட்டும் நாங்கள் செல்லாதபடி காலப்போக்குச் செய்வதில்லையென்பதற்கு எங்களுக்கு நீங்கள் ஒரு பொறுப்

பளிக்க வேண்டுமே. இப்போது எங்கள் பட்சத்தில் பொறுப்பாகக் கடைசிவரையில் நானே கரையில் தங்கி யிருக்கிறேன். உங்கள் பட்சத்தில் உங்கள் நியாயாதிபதி களில் ஒருவரை நாங்கள் புறப்படும் மட்டும் எங்கள் கப்ப லில் இருக்கும்படி யனுப்பிவையும்" என்று மொழிந்தான்.

குலசேகரன் கூறிய மொழிகளைக்கேட்ட நகர அதி காரி தலையசைத்து "அத்தகைய அபாயகரமான விஷயத் தில் தன்னை யொப்புக் கொடுக்க யாரேனும் சம்மதிப்பது மிக்க கஷ்டம். ஆயினும் இதைப்பற்றிச் சபையில் ஆலோ சனை செய்கிறேன். என்னால் கூடிய வரையில் இவ்விஷயம் இருதரத்தார்க்கும் திருப்திகரமாகவே முடியுமாறு பார்க்கி றேன்" என்றார்.

53-வது அத்தியாயம்.

நகர அதிகாரியும், குலசேகரனும் மறுபடி சபாமண்ட பத்திற்குச் சென்றபோது அதிகாரி தன் நண்பர் களில் இரண்டு மூன்று பேரை யொருபக்கமாக அழைத்து அவர்களோடு கலந்து பேசினான். அவர்கள் பேசிக்கொண் டிருக்கையில் குலசேகரனுக்கும் அவன் ஆட்களுக்கும் ஆகாரம் வட்டிக்கப்பட்டது. குலசேகரன் தன் ஆட்களைப் போசனம் அருந்தும்படி கூறினான். ஆனால் மிக்க சாக் கிரதையோடு சிலர் காவலிருக்கும்படிக்கும் சிலர் போசன மருந்தும்படிக்கும் பிறகு சாப்பிட்டவர்கள் போய் காவ லிருக்கவும் காவலிருந்தவர்கள் சாப்பிடவும் ஏற்பாடுசெய் தான். தான் அந்த அறையில் சற்றும் மனக்கலக்கமில் லாதவன்போல் உலவிக்கொண்டே அங்கிருந்தவர்களிடம் பேசிக்கொண்டிருந்தான்.

அங்கிருந்தவர்களில் தற்செயலாக ஒரு ஆளைக் கண்

டதே குலசேகரன் மிக்க வியப்படைந்தான். அந்த ஆள் சோரனூர் வாசியும் விவசாயியுமாகிய எல்லப்பன் என்பவனே. அவன் அந்த இடத்திற்குத் தற்செயலாய் வந்திருந்தபடியால் நகர அதிகாரி அவனையும் ஒரு பிரதிநிதியாகத் தமது சபையில் சேர்த்துக்கொண்டார். குலசேகரனுக்கு அவன் அறிமுகமானதால் அவன் உடனே எல்லப்பனோடு பேசத்தொடங்கி "நீ என்ன வேலையாக இங்கு வந்தாய்?" என்று வினவினன்.

எல்லப்பன்:—"என் விவகாரங்கள் சிலவற்றைக் கவனிக்கலாமென்று வந்தேன். இங்கு சமீபத்தில் இரண்டொரு தோட்டங்கள் வைத்திருக்கிறேன். அவற்றிற்குச் சரியான மேல்பார்வையில்லாமல் கெட்டுப்போகின்றன" என்றான்.

குலசேகரனுக்கு அச்சம்பாஷணையில் சற்றும் பிரியமில்லையெனினும் காலப்போக்குக்காக பேசிக்கொண்டிருந்தான். "ஏன், உன் தோட்டங்களிலிருக்கும் செடிகள் முதலியவை வளர்ந்துகொண் டிருக்கின்றனவல்லவோ?" என்றான்.

எல்லப்பன்:-"இவ்வூரில் எல்லாம் வளர்கிறபடி யவைகளும் வளர்கின்றன. அதாவது கீழ் நோக்கி" என்றான்.

குலசேகரன்:—"அப்படியாயின் கவனிப்பார் இல்லாததால் தான் என்று கருதுகிறேன்" என்றான்.

இவர்கள் இவ்வாறே சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் நகர அதிகாரி அங்கு வந்தார். அவர் குலசேகரனை நோக்கி, "காப்டென்! நாங்கள் ஒரு முடிவிற்கு வந்து விட்டோம். உன்னுடைய கப்பல் சிறு நகர் துறைமுகத்திற்குச் சென்று தென் துறையிலிருக்கட்டும். ஏனெனில் அப்போதுதான் உன் ஆட்களுக்கும் இங்குள்ளவர்

களுக்கும் சச்சரவு நேராது. உன் கப்பல் அங்கிருந்தால் நாங்கள் உணவுப்பொருள் யாவும் அனுப்புகிறோம். நீ கரையில் இங்கு தங்கியிருப்பதாகக் கூறுகிற வரையில், உனது கப்பலுக்கு இச்சலசந்தியில் சரியான வழி காட்டுவதற்காக நாங்கள் ஒரு மரியாதையான பெரிய மனிதரை உன் கப்பலோடு அனுப்பச்சித்தமாயிருக்கிறோம்'' என்றார்.

குல.—''நல்ல புத்திசாலித்தனமான தலைவர் போலவே கூறினீர். அதோடு நான் எதிர்பார்த்த மாதிரியே கூறினீர். ஆனால் எங்கள் கப்பலைக் கௌரவப்படுத்த விருக்கும் பெரிய மனிதர் யாரோ?'' என்றான்.

நகர அதிகாரி "அதைப்பற்றி முன்னமே தீர்மானித்து விட்டிருக்கிறோம். இத்தகைய கேளிக்கையான யாத்திரைக்கு, சந்தோஷகரமான அத்தகைய நண்பர்கூடச் செல்வதற்கு எங்களில் ஒவ்வொருவரும் மிக்க ஆவலுடையவர்களாகவே யிருக்கிறோம். ஆனால் இப்போது சந்தைத் திருவிழாக் காலமானதால் ஒவ்வொருவர்க்கும் ஏதேனும் அலுவல்கள் இருக்கின்றன. என் வரையில் என் உத்தியோக முறைமையில் நான் இதை விட்டுச் செல்ல உதவாது. எனது பிரதம உத்தியோகஸ்தரின் மனைவி பிரசவித்திருக்கிறாள். இன்னொருவர்க்குக் கடற் பிரயாணம் ஒத்துக்கொள்ளாது. மற்ற இருவர்க்கு இருமல் வியாதி. மற்றபேர்க்கும் அவரவர்களுக்கு ஒவ்வொரு வேலையிருக்கிறது'' என்றார்.

குலசேகரன்:—ஐயா! இவ்விஷயங்களனைத்தும் நான் முன்னடியே யெதிர்பார்த்தவைகளே யென்று நிச்சயமாய்க் கூறுகிறேன்.

அதிகாரி:—ஒரு நிமிடம் பொறும். நமது கௌரவம் பொருந்திய எல்லப்பன் அவர்கள் உங்கள் கப்பலுக்கு

வந்து அதைக் கௌரவப் படுத்துவதைப்பற்றிய சங் கதியைப் பேசுவோம்

அம்மொழிகளைக் கேட்ட எல்லப்பன் திடுக்கிட்டு "என்னையா? உங்கள் யாத்திரையைப்பற்றி எனக்கென்ன கவையிருக்கிறது. என் வேலைகளெல்லாம் உலர்ந்த தரையி லிருக்கிறது. கடலைப்பற்றிய விவகாரத்திற்கும் எனக்கும் மிக்க தூரமாயிற்றே" என்று வியப்போடு மொழிந்தான்.

நகர அதிகாரி எல்லப்பனருகிற்சென்று குசுகுசு வென்று "இவர்கள் கப்பலைச் சல சந்தியின் வழியாய்ச் செலுத்த ஒரு வழி காட்டவேண்டுமாம். இவர்களோ டனுப்ப வேறு ஒருவரும் சிக்கவில்லை" என்றான்.

எல்லப்பன் கெட்டியாகவே "அவர்களுக்கென்ன கப்பலைக் கரையிலேற்றிவிடவேண்டுமென்ற எண்ணமிருக் கிறதோ? ஆயுளில் சுங்கான் என்பதையே கண்டிராத நான் கப்பலை எப்படிச் செலுத்துவது?" என்றான்.

அதிகாரி இரகசியமாய் "உஸ், உஸ், பேசாமலிரு. நீ இம்மாதிரி கப்பலின் சுக்கானையே தொட்டதில்லையென் பதை யிவ்வூர் ஜனங்கள் அறிந்தாலோ அதோடு உனக் குள்ள கௌரவம், பெருந்தன்மை, பெரிய மனிதத்தரா யாவும் அடியோடு கைகழுவிவிடப்பட்டமாதிரியே யாகும். தெரிகிறதா? இத்தீவில் வசிக்கும் ஜனங்களுக்கு கப்பலோட் டத்தெரியாத மனிதனைகவிருந்தால் அவன் யாராகவிருந் தாலும் சரி. ஒரு துரும்பவ்வளவுகூட மதிப்புப் பெறமாட் டான்; அதோடு உன்னை யக்கப்பலோடனுப்புவது வெறும் சடங்கே. உன்னோடுகூட பழையகப்பலோட்டி யொரு வனைத் துணையாக அனுப்புகிறேன். நீ நன்றாகச் சாப்பிடு வதும் குடிப்பதும் வேடிக்கையாகக் காலத்தைக் கழிப் பதுமன்றி ஒன்றும் செய்யவேண்டுவதில்லை" என்றார்.

எல்லப்பன் இத்தகைய தொழிலையிவர்கள் இவ்வளவு

அவசரமாய் நம்மேல் ஏன் சுமத்தவேண்டும் என்று சிந்தித்தான். அவனுக்குச் சற்றும் விளங்கவில்லை. ஆயினும் நகர அதிகாரி தன்னினும் எவ்வளவோ மிக்க அறிவாளியாகையால் அவர் வார்த்தைக்கு மறுத்துக்கூற மனமில்லை. ஆகையால் அவன் சற்றுநேரம் சிந்தித்த பிறகு அவரை நோக்கி "உண்பதும் குடிப்பதும்! அதுவரையில் நன்றாகவேயிருக்கிறது. ஆனால் கடலில் செல்வது தாங்கள் கூறிய உங்கள் உத்தியோகஸ்தரைக் காட்டிலும் எனக்கு இன்னும் அதிகமாக ஒத்துக் கொள்ளாது. உண்பதும் குடிப்பதுமாகிய வேலைகளைக்கூடக் கரையில் செய்வதே எனக்கு எப்போதும் விருப்பம்" என்றான்

நகர அதிகாரி மிக்க அடக்கமான குரலாய் "உஸ்! உஸ்!! நீ உண்மையாகவே உன் கௌரவத்தை யடியோடழித்துக் கொள்ளக் கருதுகிறாயோ என்ன? உன்போன்ற ஒரு நல்ல அந்தஸ்திலுள்ள கௌரவமான பெரிய மனிதன் தனக்குக் கப்பலோட்டுவதைப்பற்றிச் சற்றும் தெரியாதென்று கூறுவது உனக்கு மட்டுமல்ல எங்களனைவர்க்குமே மிக்க அகௌரவத்தை யல்லவோ உண்டாக்கிவிடும். இதைவிட நீயொரு வடநாட்டான் என்று கூறிவிடலாமே" என்றார்.

குலசேகரன் "ஐயன் மீர்! இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் எப்படியாவது முடிவுசெய்து கொள்ளுங்கள். எங்கள் கப்பல் இன்னும் ஆலசியமாக விருக்கலாகாது. உடனே புறப்படவேண்டும்" என்று கூறிவிட்டு எல்லப்பனை நோக்கி, "ஏனையா! நீ எங்கள் கப்பலுக்கு வந்து அதைக் கௌரவப்படுத்தப் பிரியப்படுகிறாயோ? என்றான்.

எல்லப்பன்:—"உன்னோடு கூட எங்கு செல்லவும் எனக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால்...." என்பதற்குள். நகர அதிகாரி மிகத்துரிதமாய் "அவருக்குச் சற்றும்

ஆக்ஷேபனையே யில்லை" என்றார். அவரருகிலிருந்த இன்னொரு உத்தியோகஸ்தரும் "இல்லை யில்லை. அவருக்கு ஆக்ஷேபனையே கிடையாது" என்றார். உடனே அங்கிருந்த மற்ற பேரும் "சேசே! அவருக்கு ஆக்ஷேபனையே யில்லை; அவர் எப்போதும் பொது நலத்திற்காக ஊழியம் செய்வதில் மிக்க பிரயமுடையவர்" என்றார்கள்.

ஒருவர்:—"ஹா! அவர் மிக்க கன்னியமான பெரியமனிதர்" என்றார்.

மற்றொருவர்:—"எப்போதும் பிறருக்கு உபகாரம் செய்வதிலேயே எண்ணமுடையவர்" என்றார்.

இன்னொருவர்:—"அத்தகைய கௌரவ முடையவரானபடியால் தான் நமது நகர அதிகாரி அவரை மிக்க பிரியத்தோடு இச்சபையில் ஒரு பிரதிநிதியாக இருக்கும்படி வேண்டிக்கொண்டார்" என்றார்.

இத்தகைய முகஸ்துதியான மொழிகளைக்கேட்ட எல்லப்பன் திப்பிரமை யடைந்துவிட்டான். அவனுக்கு அவர்கள் வார்த்தைகள் மனப்பூர்வமாகக் கூறப்படுகிறவைகளல்ல வென்று தெரியவில்லை. உண்மையாகவே தன்னையவ்வளவு கௌரவமாக எண்ணி நடத்துகிறார்களென்று நம்பிக்கொண்டான். அதோடு தன்னைக் குலசேகரன் கப்பலோடு செல்லும்படி ஏன் கூறுகிறார்களென்று அவனுக்கு விளங்கவே யில்லை. அதிலும் தன்னை யொரு காரியத்திற்காக ஈடுவைக்கிறார்களென்பது அவன் புத்தியிற் சற்றும் படவில்லை. ஆகையால் இவர்கள் நம்மை யிவ்வளவு கௌரவப்படுத்தும்போது நாம் இவர்கள் வார்த்தைக்கு மாறு கூறலாகாது என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். அதன்மேல் அவன் குலசேகரனுடைய கப்பலுக் கழைத்துச் செல்லப்பட்டான். அவனை அன்போடும் மரி

யாதையோடும் நடத்தும்படி குலசேகரன் தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டான்.

கோபாலனும் அவன் நண்பர்களும் எல்லப்பனை யழைத்துக்கொண்டு கப்பலுக்குச் சென்றார்கள். அச்சமயத்தில் தான் குலசேகரன் கரையிலேயே யிருக்கப் போகிறானென்ற சங்கதி எல்லப்பனுக்குத் தெரிந்தது. உடனே யவனுக்குப் பெரும் பீதியுண்டாய் விட்டது. குலசேகரன் ஒருவனே யவனுக்கு அறிமுகம். வசந்தமாளிகையில் அவனோடு நன்றாய்ப் பழகியிருக்கிறான். அவனிடம் அவனுக்கு நம்பிக்கையுண்டு. ஆகையால் சபாமண்டபத்தை விட்டு வெளிப்படும்போது கடைசியாக ஒரு முறை நான் கப்பலுக்குச் செல்லமுடியாது என்று மறுத்துக்கூறி "இல்லை யில்லை. அய்யா நகர அதிகாரியவர்களே! நியாயாதிபதிகளே! சபையின் அங்கத்தவர்களே! எனக்கு உதவியாக விருக்க காப்டென் குலசேகரன் என்கூட வந்தாலன்றி நான் செல்லவே மாட்டேன். நீங்கள் என்னைக் கயிற்றால் கட்டி பலவந்தமாக வேண்டுமானால் கொண்டு போகலாம்" என்றான்.

ஆயினும் மற்ற அனைவரும் "எல்லப்பருடைய பரோபகாரச் சிந்தனை புகழத்தக்கது. அவருடைய யாத்திரை மிக்க உல்லாசமாகவும் சந்தோஷமுடையதாகவும் நிறைவேறுவதாக. எல்லப்பன் பூரணசுகத்தோடு நீடூழி வாழ்க!..." என்று இவ்வாறு வேணுமென்றே போட்ட கோஷ்டத்தில் எல்லப்பன் முறையிட்டுக்கொண்டது ஒருவராலும் கவனிக்கப்படவில்லை. எல்லப்பன் ஒன்றும் தோன்றாமல் திப்பிரமையடைந்து விட்டான். சற்று நிதானித்தபோது தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் ஒரு கட்டாய் இவ்வாறு செய்யத் தீர்மானித்து விட்டிருக்கிறவரையில் நமது வார்த்தையை யொருவரும் கவனித்து ஏற்றுக்கொள்ளப்

போகிறதில்லை என்று அவன் புத்தியிற்பட்டது. ஆகையால் இனி நாம் பேசுவதில் ஒரு பயனுமில்லையென்று எல்லப்பன் பேசாமல் மாலுமிகள்கூடச் சென்றான். அவர்கள் அவனை வீதிக்கழைத்துச் சென்று அவன் இருபுறங்களிலும் வரிசையாக நின்றபடி அவனைக் கப்பலிருக்கும் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வெளியிலிருந்த ஜனங்கள் இதென்ன சமாசாரம்? கப்பல் ஆட்கள் இவனைப் பிடித்துக்கொண்டு போகிறார்களோ என்று ஆவலோடு அவர்கள் பின்னாற் சென்றார்கள். ஆனால் அவர்கள் செல்கிறவர்களைத் தடுக்கவுமில்லை. அவர்களுக்கு வேறெவ்வித இடையூறேனும் செய்யவுமில்லை.

இவர்கள் சென்றுகொண்டேயிருக்கையில் எல்லப்பன் தன்கூட வரும் ஆட்களை நிதானமாய் நோக்கினான். அவர்கள் முகங்களை நன்றாக நோக்கியபோது தான் கேள்விப்பட்டபடியே அவர்கள் மிக்க துணிகரமான முரடர்களென்றும் அதோடு தன்னைப்பற்றி முக்கியமாய் அவர்கள் ஏதோ ஒரு உத்தேசம் கொண்டிருக்கிறார்களென்றும் அவன் மனதிற்பட்டது. முக்கியமாய் காப்டென் கோபாலனுடைய குரூரமான பார்வை அவனுக்கு அதிக பீதியையுண்டாக்கி விட்டது. கோபாலன் தன் தோளில் பிடித்திருந்த பிடி ஒரு இரும்பு ஆயுதம்போல் இருந்தது. கோபாலன் எல்லப்பன்மேல் அடிக்கடி நாட்டிய கடைக்கண் கீழ் பார்வை எல்லப்பனுக்கு ஒரு கழுகு தன் இரைமேல் ப்ாயும்போது உற்று நோக்கும் கள்ளப்பார்வைபோல் தோன்றியது. கடைசியில் அவன் பயம் சகிக்கமுடியாததாகிப் பிறகு அதிலும் கொஞ்சம் தைரியமுண்டாக அவன் கோபாலனை நோக்கிச் சற்று தாழ்ந்த குரலாகவே "கப்பித்தான்! கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள நீதிக்கு விரோதமாய் என்னைக் கொலைசெய்யவா போகிறீர்கள்?" என்றான்.

எல்லப்பனுக்கிருக்கும் பீதியை யதிகப்படுத்தவேண்டு மென்பதற்கு கோபாலனுக்குக் காரணமிருக்கிறது. ஆதலின் அவன் எல்லப்பனை நோக்கி "நீ புத்திசாலியாகவிருந்தால் பேசாமலிரு. நாங்கள் ஒரு மனிதனைக் கொன்று மூன்றுமாதங்களுக்கு அதிகமாயிற்று. நீ யேன் அதைப் பற்றி எங்களுக்கு நினைப்பூட்டுகிறாய்?" என்றான்.

எல்லப்பன்:—"ஓ நல்ல கப்பித்தானே! நீ கேலியாகவே பேசுகிறாய் என்று நினைக்கிறேன். என்னைக்கொல்வதால் உங்களுக்கு என்ன இலாபம்?" என்றான்.

கோபாலன்:—"அதினால் எங்களுக்கு ஒருவிதச் சந்தோஷமும், இன்பமும் இருக்கலாகும். இதோவிருக்கிற ஆட்களின் முகத்தை யுற்றுநோக்கிப் பார் இவர்களில் ஒரு மனிதனைக் கொல்லாமல் விட்டுவிட பிரியப்படுகிறவன் ஒருவனேனு மிருக்கிறானா பார். அது கிடக்கட்டும், நீ யுன் மீட்புக்காகச் சரியான பொன் துண்டுகளை யளிக்காவிட்டால் உனக்கு முதன்முதல் கிடைக்கும் ஒத்தடங்களை (அடிகள்) யறிந்தபின் அதைப்பற்றிப் பேசலாம்" என்றான்.

எல்லப்பன் "நான் உண்ணும் அன்னத்தின்மேல் சத்தியமாய்க் கூறுகிறேன். என்னிடமிருந்த புதையலை அந்தக் குள்ளக் கள்ளப்பயல் களவாடிக்கொண்டு போய்விட்டான்" என்றான்.

கோபாலன்:—"ஒன்பது மணிச் சாட்டி சீக்கிரத்தில் உன்னை யப்புதையலைக் கண்டுபிடிக்கச் செய்யும். சௌக்கடியும் பட்டினியும் ஒரு மனிதனுக்கு அவன் பணம் இருக்குமிடத்தை நினைவிற்குக் கொண்டுவர முதல்தரமான ஔஷதங்கள். அவன் கண்கள் பிதுங்குமட்டும் வில் கயிற்றை அவன் மண்டையில் மாட்டி முடுக்குவது கூட அதற்கு நல்ல மருந்தே" என்றான்.

இப்போது கோபாலன் கூறிய வனைத்தும், கப்பற் கொள்ளைக்காரரும் சாதாரண கொள்ளைக்காரரும் ஒரு ஊரில் புகுந்து கொள்ளையடிக்கும்போது ஜனங்கள் தாங்கள் தங்கள் பொருளை மறைத்து வைத்திருக்கும் இடத்தை வெளியிடுவதற்காகச் செய்யும் சித்திரவேதனைகளேயாகும்.

எல்லப்பன் தைரியத்தோடேயே, "காப்டன் என்னிடத்தில் பணமில்லை. நாங்கள் கஷ்டப்பட்டு பூமியைப் பண்படுத்தி தானியத்தை விதைத்து, அது பயிராகும்போது மிக்க ஜாக்கிரதையோடு காவலிருந்து எவ்வளவு பாடுபட்டாலும் கடைசியில் மிச்சமாக ஒரு காசேனும் கையில் நிற்பதில்லை'' என்றான்.

காப்டேன் கோபாலன்:-"நீ கூறுகிறபடி நீ உண்மையாகவே ஏழையாயிருந்தால், நான் உன் நண்பனாக உன் பட்சத்தில் நிற்பேன்'' என்று கூறிவிட்டுப் பிறகு அவன் காதருகில் குனிந்து இரகசியமாய், "நீ யுன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினால் எங்களோடு வந்து எங்கள் கப்பலில் ஏறுதே'' என்றான்.

எல்லப்பன்:—"நீ என்னை யிப்படிக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கையில் நான் எப்படி இங்கிருந்து தப்பித்துக்கொண்டுபோவது?'' என்றான்.

கோபாலன்:—"அட மட்டி சாம்பிராணியே! நான் கூறுவதைக் கவனமாகக் கேட்டுக்கொள். நாம் கடலோரம் சென்றதும் ஆட்களெல்லாம் அங்கு ஆயத்தமாகவிருக்கும் படகில் குதித்து அதைச் செலுத்த ஆயத்தம் செய்துகொண்டிருப்பார்கள். அச்சமயம் நான் உன் தோளை விட்டுவிடுகிறேன். நீ யுடனே ஓட்டம் பிடி. தெரிகிறதா?'' என்றான்.

எல்லப்பன் அவ்வாறே செய்வதென்று துணிகரங்கொண்டான். காப்டென் கோபாலன் கூறியபடி இவர்

கள் துறைமுகத்தின் ஓரத்தில் சென்றதும் மாலுமிகளெல்லாம் கப்பலுக்குப்போய்ச் சேரவேண்டுமென்ற ஆவலோடு துரிதமாகப் படகில் ஏறிக்கொண்டு அதை செலுத்த வேண்டிய வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள். கோபலன் தான் கூறியபடி எல்லப்பனுடைய தோள்பிடியை விட்டுவிட்டான். எல்லப்பன் உடனே அங்கிருந்து திரும்பி வாயுவேகம் மனோவேகம் என்னும்படி நகரை நோக்கியோடினான். அவனுக்குண்டாகியிருந்த பிராண பீதியால் அவன் நகருக்குள் நுழைந்து ஓடி நகரில் எங்கும் நிற்காமல் நகரைக்கடந்து அதற்கப்பாலுள்ள வெளிப்பிரதேசத்தை யடைந்தபிறகே பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றான். அவனுடைய தடித்த தேகத்திற்கும் குட்டைக்கால்களுக்கும் அவன் அவ்வளவு வேகமாக ஓடுவானென்று ஒருவரும் நம்பமாட்டார்கள். ஆனால் பிராணபயம் ஒருவர்க்கு அதிசயமான பலத்தை யளிக்கிறதென்பது இவன் விஷயத்தில் உண்மையென ருசுவாயிற்று.

நேயர்களே! தங்கள் கப்பித்தான் ஊராரிடம் பிணையாயிருக்கிறான். அவனுக்கு ஈடாகத் தங்களிடம் அளிக்கப்பட்ட ஆளை யாரேனும் வேண்டுமென்றே இப்படி விட்டுவிடுவார்களோ? கோபாலன் அப்படிச் செய்ததன் காரணம் பின்னால் விளங்கும்.

54-வது அத்தியாயம்.

ஓடும் எல்லப்பனை ஒருவரும் துரத்திச் செல்லவில்லை. மாலுமிகளில் சிலர் துப்பாக்கியால் அவனைச் சுடக் கருதி துப்பாக்கிகளை நீட்டினார்கள். ஆனால் காப்டென் கோபாலன் எப்போதுமில்லாத நீதியும் சீவகாருண்யமும் காட்டி "சே சே! ஒரு மனிதனை இவ்வளவு அலட்சியமா

கச் சுட்டுவிடக்கருதுவது நியாயமாகுமா? மேலும் நாமும் நகர ஜனங்களும் ஒருவித சமாதானமான நிலைமையிலிருக்கிறோம். அப்படி யிருக்க நாம் விபரீதச் செயலுக்கு இடந் தரலாகாது. அவர்கள் அனுப்பிய பிணையாளியே ஓடிவிடுவதால் தப்பிதம் அவர்கள்மேலேயே ஆகிறது. ஆகையால் நீங்கள் பேசாமல் படகைக் கப்பலுக்குச் செலுத்துங்கள்" என்று படகைச் செலுத்தும்படி துரிதப்படுத்தினன்.

ஊராரோ எல்லப்பன் ஓடிவந்துவிட்டதால் தங்கள் பட்சத்திற்கே அனுகூலம் உண்டாயிற்றென்று உணர்ந்தார்கள். ஆகையால் எல்லப்பனை விட்டுத் திரும்பிச்செல்லும் படகை நோக்கிக் கேலியாகக் கரகோஷம் செய்தார்கள். ஆனல் நகர அதிகாரி நியாயாதிபதிகள் முதலியவர்கள், இம்மாதிரி தங்களுக்கும் கப்பற் கொள்ளைக்காரருக்கும் இருக்கும் ஒப்பந்தத்திற்கு பங்கம் நேர்ந்ததால் என்ன குழப்பம் உண்டாகுமோ என்று கலக்கமடைந்தார்கள். இப்போது எல்லப்பனை இரகசியமாகப் பிடிப்பதாயின் அவனை மறுபடி பிணையாக அனுப்பிவிடவேண்டும். அத்தகைய காரியத்தைச் செய்தால் நகர ஜனங்களுக்கு ஆத்திரம் உண்டாகிக் கலகம் நேரிடலாகும். ஏனெனில் தங்கள் நடக்கை மிக்க அக்கிரமமானதாகக் கருதப்படும். நியாயமாய் அவன் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டதற்காக அவனைப் பகிரங்கமாய்ப் புகழ்ந்துகொண்டாடவேண்டும் என்பது அவர்கள் பிரியம். ஆகையால் யாவும் யோசித்தபின் குலசேகரனை ஜாக்கிரதையாக கவனித்துக் கொண்டிருப்பதென்றும் அவன் அச்சமயம் கப்பலில் தலைவனக அதிகாரம் செய்துகொண்டிராவிடினும் கப்பலிலுள்ள ஆட்களின் அக்கிரம நடக்கைக்கு அவனையே பொறுப்பாகக்கொள்ளவேண்டுமென்று தங்களுக்குள் தீர்மானித்தார்கள்.

குலசேகரனோ நடந்த சங்கதியைக் கேட்டதும் காப்டென் கோபாலனுடைய தீயவஞ்சக எண்ணம் இன்னதென்று நன்றாயறிந்துகொண்டான். அதாவது "எல்லப்பனைத் தப்பிப் போகும்படி விட்டுவிட்டால் நகர அதிகாரிகள் தன்னைக் கொன்றுவிட்டாலும் கொன்றுவிடலாம்; சிறையில் நெடுங்காலம் அடைத்துவிட்டாலும் அடைத்துவிடலாம். இனி என்ன நேர்ந்தாலும் யாவற்றுக்கும் தன்னையே நகர ஜனங்கள் பொறுப்பாளியாக எண்ணுவார்கள்" என்ற கெட்ட எண்ணத்தோடேயே எல்லப்பனை வேணுமென்றே விட்டுவிட்டான்" என்று நன்றாக அறிந்துகொண்டான்.

விவகாரங்கள் தனக்கு ஆபத்தான நிலைமையில் திரும்பி விட்டிருந்தாலும் குலசேகரன் மனங் கலங்குகிறவனல்ல. அவன் தன் நண்பனாகிய பொன்னுசாமி என்ற அனந்தன்மேல் பூரண நம்பிக்கை வைத்திருந்தான். நகர அதிகாரிகள் அவனை மரியாதையாகவே நடத்தினாலும் "நீ இச்சமயம் கப்பித்தானாக இல்லாவிடினும் உன் ஆட்களின் நடவடிக்கைக்குத் தக்கபடி நீ நடத்தப்படுவாய்" என்று கூறினார்கள்.

குலசேகரன் வீணாக அனந்தன்மேல் நம்பிக்கை வைக்கவில்லை. எப்படியெனில் கோபாலன் மூலமாகவும் மாலுமிகளின் மூலமாகவும் எல்லப்பன் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டான் என்ற சமாசாரத்தைக் கேட்டதே அனந்தன் "ஓகோ! எல்லப்பனையோடிவிடச் செய்தால் நகர அதிகாரிகள் குலேசேகரனைக் கட்டாயம் இராஜாங்கத்தாரிடம் ஒப்பித்து விடுவார்கள். அவன் எப்படியும் தூக்கிற் போடப்படுவான்; அல்லது மரண பரியந்தம் சிறையிலடைக்கப்படுவான். பிறகு நாமே கப்பித்தானாகி விடலாம்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டே

இக்கோபாலன் அந்த எல்லப்பனைத் தூண்டி ஓடிவிடச் செய்தான். இன்றேல் அவனுக்கு ஓடிவிடத் தக்க எண்ண மாவது தைரியமாவது கிடையாது. இருக்கட்டும். எது எப்படி முடிந்தாலும் இத்துஷ்டன் மறுபடி இக்கப்ப லுக்குக் கப்பித்தானுவதை நான் பார்க்கிறேன். இவன்மட் டும் கப்பித்தானுயின் நான் என் பெயரைமாற்றி வைத் துக் கொள்கிறேன்'' என்று சபதம் செய்துகொண்டான்.

அனந்தன் தன் வாக்குச் சாதுரியத்தால் கப்பலி லுள்ள ஆட்களிடம் இம்மாதிரி தங்கள் கப்பித்தானுக்குப் பதிலாகத் தங்களிடம் ஒரு பிணையுமின்றித் தங்கள் கப் பித்தானை நகரத்தாரிடம் ஒப்பித்து விட்டிருப்பதைவிட அதிக அவமானம் வேறில்லையென்று அவர்களுக்கு ரோஷ முண்டாகும்படி செய்ததோடு கோபாலன் நடக்கையில் யாவர்க்கும் வெறுப்புண்டாகும்படிக்கும் செய்துவிட் டான். பிறகு அவர்களிடம் தந்திரமாகப்பேசி குலசேகர னுக்கு ஈடாக ஊராருடைய கப்பல்களில் தகுதியானது எது எதிர்ப்படுகின்றதோ அதைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்தான். அவன் ஏற்பாட் டின்படி நடக்க மாலுமிகளனைவரும் ஒப்புக்கொண்டார் கள். கப்பலையும் அதிலுள்ளவற்றையும் பிடித்துக்கொண்டு, ஊரார் குலசேகரனை எவ்வாறு நடத்துகிறுர்களோ அதற் குத் தக்கபடி அவற்றை நடத்துவதென்று தீர்மானித்தார் கள். அதோடு ஊரார் தாங்கள் ஒப்புக்கொண்டபடியே உணவுப்பொருள்களை யனுப்புகிறுர்களா என்பதை யறியும் பொருட்டுக் கப்பலைச் சிறு நகர்த் துறைமுகத்திற்குக் கொண்டு போவதென்று தீர்மானித்தார்கள் குலசேகரன் திரும்பிவருமட்டும் கப்பலை நடத்துவதற்கு ஒரு சபை யேற்படுத்துவதென்றும் தீர்மானித்தார்கள்.

மேற்கண்ட ஏற்பாடுகளை யாவரும் ஒப்புக்கொண்ட

தும் நங்கூரம் தூக்கிப் பாய்விரித்துக் கப்பலையங்கிருந்து கொண்டுபோகத் தொடங்கினர்கள். இதனல் அவர்களுக்கிருந்த ஒரு அச்சம் ஒழிந்தது. அதாவது தங்கள் கப்பல் கள்ளக் கப்பல் என்று நகரத்தாருக்குத் தெரிந்திருக்கிற வரையில் அவர்கள் எப்போது கருதினலும் தங்கள் கோட்டையிலுள்ள பீரங்கிகளால் இவர்கள் கப்பலை முழுகடித்து விடலாகும். இப்போது அந்த இடத்திலிருந்து புறப்பட்டு விட்டபடியால் அவர்கள் அப்படிச் செய்ய அனுகூலமில்லை.

* * * *

இப்போது நாம் தைரியநாதம்பிள்ளையையும் அவர் புத்திரிகளையும் கவனிப்போம். அவருக்கு ஒரு அழகிய பெரிய கப்பலும் ஐந்தாறு சாதாரணக் கப்பல்களும் உண்டு. அவரும் அவர் புத்திரிகளும் அந்த அழகிய கப்பலில் ஆரல் தீவுக்கு சந்தைத் திருவிழா பார்க்கப் புறப்பட்டார்கள். பாடகனுகிய பைரவி கிருஷ்டப்பனும் அவர்கள்கூட அழைத்துக்கொண்டு போகப்பட்டான். மீனுளைப்பற்றி தான் கூறிய விஷயங்களனைத்தும் அத்திருவிழாவில் அனுபவமாகத் தெரியுமென்றும் இவர்கள் அங்கு செல்ல வேண்டுமென்றும் நாகம்மாள் கட்டளையிட்டபடியே அவர்கள் புறப்பட்டார்கள்.

ஆரல் தீவைச் சத்தத்தீவினின்றும் பிரிக்கும் கடலில் ஒரு தனித்தீவிருக்கிறது. அதன் பெயர் அழகுத்தீவு. அத்தீவு ஆரல் தீவிற்கும் சத்தத்தீவிற்கும் சமதூரத்திலிருக்கிறது. அந்தத்தீவினருகில் செல்லும்போது இதுகாறும் அனுகூலமாகவே வீசிக்கொண்டிருந்த காற்று சற்றுமாருக அடிக்கத் தொடங்கியது. அதைக் கடந்து இன்னும் சற்று தூரம் சென்றபோது காற்று மும்முரமாய் வீசத்தொடங்கியது. அதனல் அவர்கள் கப்பல் சரியான வழியைவிட்

டுத் தவறிவிட்டது. சற்று நேரத்திற்குள் அக்காற்று வேறு திக்கில் இவர்களுக்கு முற்றும் பிரதிகூலமான விதமாய் மாறிவிட்டது. கடைசியில் இவர்கள் கப்பல் மாருன திக்கில் நெடுந்தூரம் போய்விட்டது. அதற்குள் இருள் சூழ்ந்து விட்டதாலும் காற்றும் மும்முரமாக வீசியதாலும் கப்பலை நடத்துவது அபாயகரமான காரியம் என்று தோன்றியது. ஆகையால் எதிர்ப்பட்ட ஒரு தீவின் ஓரத்தில் இரவு தங்கிவிட வேண்டியதாயிற்று. அத்தீவிற்கு பாப்பாத்தீவு என்றுபெயர். அத்தீவு அதிகமேடானதல்ல. அதோடு அந்த இடம் அவ்வளவு பாதுகாப்பானதுமல்ல.

மறுநாட்காலை சற்று அனுகூலமான காற்று வீசியதால் அங்கிருந்து புறப்பட்டார்கள். அவர்கள் வழியிலிருந்த இரண்டு தீவுகளைக்கடந்து ஆட்டுத்தலை யென்ற ஒரு முனையைச் சுற்றிக்கொண்டு ஆரல் தீவிற்குச் செல்லும் நேர்வழியை யடைந்தார்கள். அவர்கள் ஆரல் தீவின் எதிரிலிருக்கும் விரிகுடாவில் பிரவேசித்தபோது அத்தீவிலுள்ள தாழ்ந்த கட்டிடங்களின் இடையிலிருக்கும் பிரம்மாண்டமான அழகிய கோயில் கண்களுக்குப் புலப்பட்டது. மீனாளும் புனிதவதியும் அதை வியப்போடும் சந்தோஷத்தோடும் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதே சமயம் தைரியநாதம்பிள்ளையும் பைரவி கிருஷ்ணப்பனும் வியப்போடு இன்னொரு பொருளைப் பார்க்க நேர்ந்தது. அது ஒரு கப்பல். அதில் பீரங்கிகளிருந்தன. அது அப்போதுதான் நங்கூரம் தூக்கிப் பாய் விரித்து தைரியநாதம்பிள்ளையின் கப்பல் குடாவுக்குள் செல்லும் வழியே குடாவைவிட்டு வெளியில் வந்துகொண்டிருக்கிறது.

தைரியநாதம் பிள்ளை:—"அது ஒரு பலமான கப்பல். அதில் எந்தக்கொடியும் தூக்கப்படாமலிருப்பதால் அது

எந்தநாட்டுக் கப்பலென்று அறியமுடியவில்லை. ஆயி னும் அது தெற்கு நாட்டில் கட்டப்பட்டதென்று கருதுகிறேன்" என்றார்.

கிருஷ்ணப்பன்:—"ஹோ ஹோ! அது காற்று வாட்டத் தில் வருகிறது. நாம் காற்றோடு போராடிக்கொண்டு செல்லவேண்டும். அதன் மாதிரியைப் பார்த்தால் ஒரு முதல்தரக் கப்பல்போ லிருந்தாலும் எனக்கு என்ன கப்பலென்று விளங்கவில்லை. அது ஒரு கடல் தேளாகவிருக்குமோ என்னமோ" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட தைரியநாதம் பிள்ளை மிக்க வியப்போடு "கடல் தேளா!" என்றார். அதற்குள் அக்கப் பல் தன் பாதையிலிருந்து திரும்பி தங்கள் கப்பலை நோக்கி வருவதைக் கண்டு "பேஷ் அது தனக்குக் கொடுக்கிருக் கிறதென்பதை நம்மிடம் காட்டாதிருக்குமென்று விரும்பு கிறேன்" என்றார்.

தைரியநாதம்பிள்ளை வேடிக்கையாகவே யப்படிக் கூறி னார். ஆனால் அது உண்மையான வினையாகவே முடிந் தது. ஏனெனில், அந்தக் கப்பல் ஒரு கொடியையும் பறக்க விடாமலே ஒரு வார்த்தையும் கூறாமலே இரண்டு பீரங்கி வெடிகள் கிளப்பியது. ஒரு குண்டு இவர்கள் கப்பலின் முன் முனையோரத்தில் கடலில் நீரைக் கழித்துக்கொண்டு சென்றது. இன்னொருகுண்டு இவர்கள் கப்பலின் பிரதான பாய் மரத்திலிருக்கும் பாயைத் துளைத்துக்கொண்டு சென்றது.

இவ்வாறு பீரங்கியாற் சுட்ட கப்பல் நமது குலசேகர னுடைய கள்ளக்கப்பலே யென்று இதை வாசிக்கும் நண் பர்கள் யூகித்துக்கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன். அவர்கள் குலசேகரன் பிணையாகக் கரையிலிருப்பதால் அவனுக்கு ஈடாக நாம் ஒரு சரியான கப்பலைப் பிடித்துக்

கொள்ளவேண்டுமென்று செய்துகொண்ட ஏற்பாட்டின் படியே யிப்போது நடக்கிறார்கள்.

தைரியநாதம் பிள்ளை ஒரு பேசும் குழலை யெடுத்து, அக்கப்பல் யார்? என்ன காரணமாக இத்தகைய நியாய மற்ற காரியத்தைச் செய்யவேண்டும் என்று கேட்பதற் காக அக்கப்பலைக் கூப்பிட்டார். அதற்குப் பதில் ஒரு கண்டிப்பான கட்டளையே வந்தது. அதாவது "உனது மேல் பாய்களை யுடனே இறக்கு. பிரதானப்பாயைப் பாய் மரத்தில் கட்டிவிடு. நாங்கள் யார் என்பதைச் சீக்கிரம் அறிவீர்கள்" என்று பதில் வந்தது.

இவர்கள் அக்கட்டளையின்படி நடக்க மறுப்பதற்குச் சமயம் சரியாகவில்லை. சமீபத்தில் எத்தகைய உதவியு மில்லை. அப்படி மறுத்தால் உடனே கள்ளக்கப்பல் தன் ஒரு பக்கத்திலிருக்கும் பீரங்கிகள் முழுமையும் சுட்டு விடும். இந்த விஷயம் தைரியநாதம் பிள்ளை முதலியவர் களுக்குத் தெரியும். ஆதலால் பெண்களும் கிருஷ்ணப்ப னும் மிக்க பீதியடைந்தார்கள். தைரியநாதர் மிக்க வியப் போடும் கோபத்தோடும் தமது கப்பலை நிறுத்தும்படி கட் டளையிட்டார்.

இப்போது தாங்கள் பிடிக்க முயலும் கப்பல் யாரு டையதென்று கள்ளருக்குத் தெரியாது. ஒரு சமயம் தெரிந்தாலும் தைரியநாதம் பிள்ளையின் குடும்பத்திற்கும் குலசேகரனுக்கும் அறிமுகம் என்ற சங்கதி அவர்களுக்குத் தெரியாது. ஆனல் அனந்தனுக்குமட்டும் குலசேகர னுக்கு மீனள் என்ற காதலி யொருத்தி யிருக்கிறாள் என் பது தெரியும்.

கள்ளக்கப்பல் இவர்கள் கப்பலருகில் வந்ததே அதி லிருந்து ஒரு படகு கடலில் விடப்பட்டதும், ஏழுபேர்

அதில் ஏறிக்கொண்டு இவர்கள் கப்பலை நோக்கிவரத் தொடங்கினார்கள். அவர்கள் அனந்தனும் அவன் ஆட்கள் அறுவருமே. அப்படகு கப்பலின் சமீபத்தில் வந்ததும் பைரவி கிருஷ்ணப்பன் தைரியநாதம் பிள்ளையிடம் குசு குசு வென்று "நாம் கப்பற்கொள்ளைக்காரர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட விவரம் சரியானதாயின் இதோ வருகிற ஆட்கள் அணிந்திருக்கும் உடையையும் அவர்கள் கழுத்தில் தைத்துக்கொண் டிருக்கும் சிகப்புக்குட்டையையும் அவர்கள் முகத்தில் தோன்றும் குரூரமான பார்வையையும் நோக்க இவர்கள் அத்தகையோ ரென்றே சந்தேகமின்றிக் கூறலாகும்" என்றான்.

அதற்குள் தைரியநாதம் பிள்ளைக்கும் அவ்வாறே தோன்றியது. ஆகையால் அவர் மிக்க கலக்கமும் பீதியு மடைந்து "அய்யோ கடவுளே! என்பெண்கள்! என்பெண் கள்!" என்று மிக்க மனோவேதனையோடு பிரலாபித்து "குழந்தைகாள்! சீக்கிரம்! சீக்கிரம்!! சீக்கிரம் சீக்கிரம், கீழ்த்தட்டில் போய் ஒளிந்துகொள்ளுங்கள். நான்...." என்று அலறிக்கூவினர்.

அவர் உடனே தன் கரத்திலிருந்த பேசுங் குழலை யெறிந்துவிட்டு ஒரு கையீட்டியை யெடுத்துக்கொண்டார். அவருடைய புத்திரிகள் அவரது ஆத்திரச் செயலால் மற்ற பேருக் குண்டாகக்கூடிய தீங்கைப்பற்றி அவ்வளவாகக் கருதவில்லை. அவருக்குண்டாகக்கூடிய ஆபத்தைக் கருதியே மிக்க பீதியடைந்து அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு பேசாமல் பொறுமையாயிருக்கும்படி யவரை வேண்டிக் கொண்டார்கள். கிருஷ்ணப் பிள்ளையும் "தாங்கள் ஆத்திரப்படாமல் அவர்களை நல்ல வார்த்தைகளால் சாந்தப் படுத்துவதே நலமாகும். ஒருசமயம் அவர்கள் முரட்டுத் தனமான வடநாட்டாராகவேனும் அல்லது கப்பற் படை

யைச்சேர்ந்த போர்வீரர்களாகவேனும் இருக்கலாகும்'' என்று அவரை வேண்டிக்கொண்டான்.

தைரிய:—''இல்லை யில்லை. இது ஆரல் தீவில் தான் காண்டதாய் ஹாக்கர் சுந்தரம் பிள்ளை கூறிய அதே கடற் கொள்ளைக்காரரின் கப்பலே. ஆயின் நான் உன் யோசனைப்படி நடக்கிறேன். இப்பெண்களுக்காகப் பொறுமையோடேயே யிருக்கிறேன்'' என்றார்.

அவர் பேசி வாய் மூடுவதற்குள் அனந்தன் அவன் ஆட்களோடு கப்பலின் மேலேறித் தன் உடைவாளை மேல் தட்டில் இருக்கும் கைப்பிடிக் கிராதியின் மேல் தட்டி ''இக் கப்பல் எங்களுடையது'' என்றான்.

தைரியநாதம் பிள்ளை ''என்ன அதிகாரத்தால், யாருடைய அதிகாரத்தால் பகிரங்கமான கடலில் நீங்கள் இக் கப்பலை வழி மறிக்கிறீர்கள் ?'' என்றார்.

அனந்தன் தன் இடுப்பைச் சுற்றி சொருகிக்கொண்டிருக்கும் ஆறு துப்பாக்கிகளையும் காட்டி ''இதோ ஆறு அதிகார பத்திரங்களிருக்கின்றன. வயோதிகரே! உமக்குப் பிரியமானதை யெடுத்துக் கொள்ளலாம். சீக்கிரத்தில் அவற்றின் அதிகாரத்தைக் காண்பீர்'' என்றான்.

தைரிய:—''நீ கூறுவதன் அர்த்தம் எங்களைக் கொள்ளையடிப்பதேயாகும். அப்படியே யிருக்கட்டும். தப்பித்துக்கொள்ள எங்களுக்கு மார்க்கமில்லை. ஆயினும் மாதர்களிடம் மட்டும் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள். கப்பலிலிருந்து உங்களுக்கு வேண்டுவன வற்றை யெடுத்துக் கொள்ளுங்கள். கப்பலில் அப்படி யதிகமாக ஒன்று மில்லை. நீங்கள் மட்டும் சரியாக நடந்து கொண்டால் நான் இன்னும் உங்களுக்குத் திருப்தியாக அளிப்பேன்'' என்றார்.

படகில் அனந்தன் கூடவந்த டக்கன் ''மாதர்களிடம்

மரியாதையாகவா? நாங்கள் அவர்களிடம் மரியாதை யின்றி வேறு விதமாக எப்போது நடந்து கொண்டிருக் கிறோம்? மரியாதையோடும் அன்போடுங்கூட! ஓ அனந் தம்! இதோ பார், எத்தகைய நேர்த்தியான குள்ளக் குட்டி! இவள் நம்மோடு கொஞ்சதூரம் வேடிக்கையாய் யாத்திரை செய்யவேண்டும். யார் என்ன செய்தாலும் செய்யட்டும்'' என்று கூறிக்கொண்டே ஒரு கரத்தால் புனிதவதியைப் பற்றிக்கொண்டு மற்றொரு கரத்தால் அவ ளுடைய முகமூடியை யிழுத்துக் களைந்தான். அச்சமயம் தன் தந்தை தனக்கொரு உதவியும் செய்ய முடியாதென் பதை மறந்திருந்த புனிதம் "அப்பா! அப்பா!'' என்று கூவினாள். தன் புத்திரியை யிவ்வாறு கள்ளன் அவமரி யாதையாய் நடத்துவதைக் கண்ட தைரியநாதம் பிள்ளைக்கு அடக்கொணுக் கோபம் வந்து விட்டது. அவர் இயற்கை யில் தைரியசாலியே. ஆயினும் தன் வலியும் மாற்றான் வலியும் காலபலமும் யாவற்றையும் ஆலோசித்தே யுத்தத் திற்குத் தொடங்கவேண்டும். ஆனால் அத்தகைய சந்தர்ப் பத்தில் ஆத்திரமிகுதியால் தைரியநாதர் தமது ஈட்டியை யெடுத்தார். ஆனால் அனந்தன் அவர் கையைப் பிடித்துத் தடுத்து "தந்தைக்குச் சமதையானவரே! பொறும். இன் றேல் ஆபத்தாய் முடியும்'' என்று கூறிவிட்டு "டக்கன்! அக்கன்னிகையை விட்டுவிடு!'' என்றான்.

டக்கன்:—"ஓகோ! நான் ஏன் அப்படி விட்டுவிடவேண் டும்?'' என்றான்.

அனந்தன்:—"ஏனென்றால் நான் கட்டளை யிடுவதால். மேலும் என் கட்டளைக்குமீறி நடந்தால் அது சண் டையாய் முடியுமாதலால்'' என்று கூறிவிட்டு, கன் னிகைகளை நோக்கி,

"அழகிய கன்னிகைகளே! உங்களில் அதிசயமான

மீனாள் என்ற பெயரையுடையவர்கள் யாரேனும் இருக்கிறீர்களோ? ஏனெனில் அப்பெயருக்கு நான் மரியாதை செய்யவேண்டிய காரணமிருக்கிறது" என்றான்.

பைரவி கிருஷ்ணப்பான் "அய்யா! தங்களிடம் சங்கீத ஞானமும் கவிஞானமும் இருப்பதால் தான் அவ்வாறு கூறுகிறீர்கள்" என்றான்.

அனந்தன் என் காலத்தில் நான் போதுமானவரை பாட்டையும் சங்கீதத்தையும் கண்டேன். ஆனால் பெரியவரே! அந்தக்காலம் போய்விட்டது. எது எப்படியாயினும் இக்கன்னிகைகளில் மீனாள் யார் என்பதை நான் சீக்கிரம் கண்டறிந்து கொள்வேன். உங்கள் முகங்களிலிருந்து மூடிகளைக் கொஞ்சம் எடுங்கள். நீங்கள் எதற்கும் பயப்படவேண்டாம். உங்களுக்கு ஒருவரும் தீங்கிழைக்கக் கருதவே முடியாது. ஓ! நல்ல நேர்த்தியான அழகிய கன்னிகைகள்" என்று கேலியாய்ப் பேசத் தொடங்கினான்.

அக்கன்னிகைகள் அவனுடைய துணிகரமான வார்த்தைகளைக் கேட்டு பீதியடைந்து ஒருவரை யொருவர் பற்றிக் கொண்டார்கள்.

அனந்தன்:—"ஓகோ! பயப்படாதீர்கள். உங்கள் பிரியத்திற்கு மாறாக ஒன்றும் நடவாது. நாங்கள் ஒருவரையும் பலவந்தம் செய்வதில்லை. நீங்கள் எப்போதும் எதிர்பாராத பாஷையைப் பேசுவதால் என்னைப் பீதியோடு நோக்காதீர்கள். உங்களில் ஒருவரேனும் காப்டென் குலசேகரனைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே புனிதவதி மிக்க கலக்கமடைந்து விட்டாள். அவள் மனதில் திகிலுண்டாயிற்று. அவள் முகம் வெளுத்து விட்டது. தன் காதலனுடைய பெயர் எதிர்பாராத விதமாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்ட

தைக் கேட்ட மீனாளின் முகத்தில் குபீலென்று இரத்தம் ஏறியது. நடந்த சம்பவம் யாவர்க்கும் மிக்க குழப்பத்தையும் பிரமையையும் அளித்ததால், குலசேகரன் வசந்த மாளிகையிலிருந்தபோது தன் கப்பல் என்று பிரஸ்தாபித்தது இந்தக் கப்பல்தான் என்ற விஷயம் தைரியநாதம் பிள்ளை தவிர மற்றவர்கள் மனதில் புலப்படவில்லை. மீனாள் ஒருத்திக்குமட்டுமே அவன் கப்பற் கொள்ளைக்காரன் என்ற சங்கதி தெரியும். ஆனால் அவளுக்கும் அதனுடைய அயோக்கியத்தன்மை யெத்தகையதெனப் பூரணமாய்த் தெரியாது. அது சுத்த வீரர்கள் என்று பூர்வீகத்தில் கொண்டாடப் பட்டவர்கள் செய்து கௌரவமடைந்த தொழிலே யிது என்று அவள் கருதியிருக்கிறாள்.

அனந்தன் சலகரணையாகப் பேசத் தொடங்கி தைரிய நாதம் பிள்ளையை நோக்கி "ஹா! விவகாரம் எப்படியிருக்கிறதென்பதை யறிந்துகொண்டேன். நான் அதன்படியே நடந்துகொள்வேன். தந்தையே! தாங்கள் தீங்கு நேரிடுமென்று சற்றும் அஞ்சவேண்டாம். என் காலத்தில் நான் எத்தனையோ பெண்களைத் தங்கள் க்ஷேமத்திற்காக மீட்சிப் பணம் கொடுக்கும்படி செய்திருந்தாலும், இவர்கள் ஒரு கெடுதியாவது மீட்சிப்பணமாவது இல்லாமலே க்ஷேமமாகக் கரையில் போய்ச் சேர்வார்கள்" என்றான்.

55-வது அத்தியாயம்.

தமது பெண்களுக்கு என்ன ஆபத்து நேருமோ, எத்தகைய அவமானம் சம்பவிக்குமோ வென்று பெருந்திகிலடைந்திருந்த தைரியநாதம் பிள்ளை அனந்தன் மேற் கண்டவாறு கூறியதைக் கேட்டதே மிக்க மனோ நிம்மதியடைந்து, "அப்படிச் செய்வதாய் மட்டும் நீ கிச்

சயமாய்க் கூறினல், இக்கப்பலிலுள்ள பொருள்களையெல்லால் நீ தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். அதோடு ஒரு போணி கலப்புச் சாராயமும்கூட" என்ருர்.

அனந்தன் :—"பேஷ். கலப்புச் சாராயம் மிக்க நேர்த்தியான பானமே. அதைக் கலப்பவர்கள் மட்டும் அதில் அனுபோகமுடைய கெட்டிக்காரர்களாக விருக்க வேண்டும்" என்ருன்.

பைரவி கிருஷ்ணப்பன்:—"நான் கலப்புச் சாராயம் கூட்டுகிறேன். எனக்கிணையாக அதைச் செய்யக்கூடிய ஆள் கிடைப்பது கஷ்டமென்றே நீ யறியவேண்டும்" என்ருன்.

தைரியநாதர் தமது பெண்களை நோக்கி, "குழந்தைகாள்! கிருஷ்ணப்பரோடு கீழ்த்தட்டிற்குப்போய்ச் சேருங்கள். பிறகு இவரைக் கூட்டுச் சாராயத்தோடு இங்கனுப்புங்கள்" என்ருர்.

டக்கன்:—"கூட்டுச் சாராயமா! சாதாரணமான ஒரு வர்த்தகனுடைய சுப்பலில் கூட்டுச் சாராயமாவது. இருந்தாலும் நமக்கில்லாமலா" என்ருன்.

அதன் பிறகு அனந்தன், அதற்குள் தன் இயற்கையான அயோக்கிய குணம் மேல் கிளம்பிவிடவே "இந்த இரண்டு அழகிய கன்னிகைகளும் மேல் தட்டிலேயேயிருந்து சாராயத்தையென் கிண்ணத்தில் நிரப்பிக்கொடுக்க வேண்டும். கடைசியில் நான் செய்யும் நன்மைக்கு எனக்குக் கொஞ்சம் மரியாதை காட்டவேண்டியதே" என்ருன்.

நேயர்களே! நமது தேசாசாரப்படி மணமாகாத கன்னிகைகளுக்கு இத்தகைய வேலை வைப்பதைக் காட்டிலும் மிக்க அவமானமான செய்கை வேறில்லை. ஆனல் அவர்கள் (மேல் நாட்டார்) ஆசாரப்படி அது அவ்வளவு அவமானமான செய்கையாகக் கருதப்படாது. ஏனெனில்

அவர்கள் ஆசாரப்படி வீட்டில் யாரேனும் விருந்தினர் வந்தால் வீட்டிலுள்ள கன்னிகைகளே அவர்களுக்கு ஆகாரம் வட்டித்து உபசரிப்பதுதான் மரியாதை. நமது ஆசாரத்தைப்போல் கலியாணமாகாத கன்னிகைகள் அன்னிய வாலிபபுருடர் முன் நடமாடலாகாது அவர்களோடு பேசலாகாது என்ற விதி கிடையாது. ஆகையால் தான் அனந்தன் அவ்வாறு கூறினன்.

அனந்தன் அந்த இரண்டு கன்னிகைகளும் எனக்கு உபசாரம் செய்ய வேண்டுமென்று கூறியதே டக்கன் "அவர்கள் என் கிண்ணங்களைக்கூட சாராயத்தால் நிரப்ப வேண்டும். அவர்கள் என் கிண்ணத்தில் நிறையச் சாராயத்தை விடவேண்டும். அவர்கள் விடும் ஒவ்வொரு துளிச் சாராயத்திற்கும் நான் ஒவ்வொரு முத்தமளிப்பேன். இன்றேல் என்னைத் தீயில் சுட்டுவிடுங்கள்" என்றான்.

அனந்தன்:—"ஓகோ! அப்படியாயின் நீ யம்மாதிரி செய்யவே கூடாதென்று நான் கண்டிப்பாகக் கூறுகிறேன். மீனளை ஒரு ஆள் தவிர வேறு ஒருவரும் தொடவே கூடாது. முத்தியளிப்பது அப்புற மிருக்கட்டும். அந்த ஒரு ஆள் நீயுமல்ல நானுமல்ல. இங்கிருப்பவரில் ஒருவருமல்ல. மீனளோடு கூடவிருப்பவள் அவளுக்குத் துணையாக விருக்கவேண்டுமாதலின் அவளும் இதில் சிக்கலாகாது. இந்த ஆரல் தீவில் பிரியத்தோடு நம்மிஷ்டப்படி நடக்கச் சம்மதிக்கும் பெண்கள் அநேக ரிருக்கிறார்கள். ஆகையால் இப்போது யோசித்ததில் இவர்கள் இருவரும் கீழ்த்தட்டில்போய் தங்கள் அறையைத் தாளிட்டுக்கொள்ள வேண்டுமென்றும், முன் ஏற்பாட்டின்படி அந்தக் கிழவரே கலப்புச் சாராயத்தைக் கொண்டுவரவேண்டுமென்றும் கூறுகிறேன்" என்றான்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008
186521

டக்கன்:—“என் உள் மனம் உனக்கு நன்றாகத் தெரியுமென்று கருதுகிறேன். நான் இந்த மூன்று வருடங்களாக உன் உதவியாளனாய் வேலை செய்துகொண்டிருக்கிறேன். நான் உன்மேல் அன்பு வைத்திருக்கிறேன். ஆயினும் உன் குணம் பலவிதமாய் மாறுவதைக் காண்கிறேன். இக் கன்னிகைகளை யிப்படிக் கீழ்த்தட்டிற் கனுப்பிவிட்டால் நாம் சந்தோஷமாய்க் காலங்கழிக்க வேறென்ன விருக்கிறது?” என்றான்.

அனந்தன்:—“இதோ கூட்டுச்சாராயம் செய்யும் நிபுணர் சீக்கிரம் வரப்போகிறார். நமக்குச் சாராயம் அளிப்பதோடு அவர் வேடிக்கையாய்ப் பாட்டுகளும் பாடுவார். இதற்கிடையில் நீ கப்பலைப் புறப்படச் செய்ய பாய்கள் முதலியவற்றை ஆயத்தம்செய். அந்த வேலைக்காரர் அந்தந்த வேலையைச் சாக்கிரதையாய்ச் செய்யுங்கள். பத்திரம் எவனேனும் துஷ்டத்தனம் செய்ய முயன்றாலோ அவன் தலை மாங்காய்போல் ஊறுகாய் போடப்படும்” என்றான்.

அரைமணி நேரங்கழித்து ஒன்றின்பின் ஒன்றாய் இரண்டு கப்பல்களும் அந்த விடத்தைவிட்டுப் புறப்பட்டன. இப்போது புதிதாக ஏற்பட்ட சம்பவத்திற்குத் தக்கபடி கள்ளர்கள் ஆரல்தீவின் அதிகாரிகளோடு சமாசாரப் போக்குவரத்து நடத்தவேண்டி யிருக்கிறது. ஆகையால் அதற்கு வசதியாக உள்ளதும், கப்பல்கள் தங்குவதற்கு அனுகூலமானதுமாகிய ஒரு இடத்தில்போய்ச் சேர்ந்து அங்கு நங்கூரம் போட்டார்கள்.

பைரவி கிருஷ்ணப்பன் கூட்டுச்சாராயம் மிக்க நேர்த்தியாகச் செய்து ஒரு பெரிய பாத்திரத்தில் ஊற்றிக் கிண்ணங்களோடு மேல் தட்டிற்குக் கொண்டுபோய் கள்ளர் முன் வைத்தான். கள்ளரில் கப்பலின் உத்தியோகஸ்த

ளுக விருந்த அனந்தனும் டக்கனும், மற்ற மாலுமிகளும் தங்கள் வேலையைச் செய்துகொண்டே சாராயத்தைத் தாராளமாக மனம்போனபடி அள்ளிக் குடிக்கத் தொடங்கினர்கள்.

தைரியநாதம் பிள்ளைக்கு ஒரு விஷயத்திற்காக மிக்க பீதியுண்டாகி யிருந்தது. அதாவது அனந்தன் இப்போது கன்னிகைகளை யொன்றும் யெய்வதில்லை யென்று வாக்களித்ததோடு தன்னையும் மரியாதையாகவே நடத்துகிறுன். டக்கன் முதலிய அவன் ஆட்களும் அவன் பிரியத்திற்கும் கட்டளைக்கும் அடங்கி நடக்கிறுர்கள். ஆனுல் இச்சாராயத்தை யிவர்கள் இப்படி அளவின்றிப் பருகுவதாயின் வெறியேறி இவர்களுடைய இயற்கையான முரட்டு அயோக்கிய குணம் கிளம்பிவிட்டால் இவர்கள் வரம்பு கடந்து எக்காரியத்தையும் செய்யத் துணிவார்களே என்று அவர் மனதில் பெருந் திகிலுண்டாயிற்று.

ஆனுல் சற்றுநேரங் கழிந்தபோது அவர்கள் அதிகமாகக் குடித்தும் முன்போலவே அடக்கமாகவும் சாந்தமாகவும் இருப்பதைக் கண்டபோது அவருக்குண்டான வியப்பு கொஞ்சநஞ்சமல்ல. அவ்வளவு சாராயம் அவர்கள் குடித்தும் அவர்களுக்குச் சற்றும் வெறியுண்டாகவில்லை. அனந்தன் மற்றபேரைவிட மிக்க சாந்தமுடையவனுய் தம்மிடம் பின்னும் மரியாதையாய்ப் பேசுவதைக் கண்ட தைரியநாதர் அவனுக்குத் தம்மேல் சந்தோஷமுண்டாக்கக் கருதி அவன் குணத்தைப் புகழ்ந்து கூறத் தொடங்கினுர்.

அவர் அவனை நோக்கி "ஓ கடவுளே! இக் கலப்புச் சாராயம் அருந்துவதில் நானே கைதேர்ந்தவன் என்று இதுகாறும் எண்ணியிருந்தேன். இப்போது நீயும் உன் ஆட்களும் அருந்துவதைக் காண உங்கள் தீனிப்பைகள்

ஆழமறியொண்ணுத சாகரம்போலிருப்பதைக் கண்டு நான் மிக்க வியப்படைகிறேன்'' என்றார்.

அனந்தன்:—“எங்கள் தொழிலால் இப்படிப் பழக்கமுண்டாயிற்று. ஏனெனில் ஒருவன் எவ்வளவு குடிப்பதாயின் சட்டப்படி கப்பலில் வேலைக்குச் சரியாய்த் தன் வேலையைச் சற்றும் தவறின்றிச் செய்யவேண்டும். அவ்வளவு கண்டிப்பாய் வேலை நடக்காவிட்டால் கப்பல் பிரயாணம் நடைபெறுது'' என்றுன்.

டக்கனுக்குச் சுமாராக வெறியேறவே அவன் அனந்தனை நோக்கி, “சரி; நீங்கள் வீண் வார்த்தையாடிக் கொண்டிருங்கள். நான் என் பாட்டைப் பாடுகிறேன்'' என்று சிற்றின்ப விஷயமாகப் பாடத் தொடங்கினுன்.

அனந்தன் “ஏ டக்கன்! நான் கூறுவதைக்கேள். உன்னுடைய ஆபாசப்பாட்டுகளொன்றும் இங்கு வேண்டுவதில்லை. நீ இங்கு உட்கார்ந்து எவ்விதச் சந்தடியும் செய்ய வேண்டாம்'' என்றுன்.

டக்கன்:—“அப்படியானுல நான் உட்காரவில்லை. நான் நடந்துகொண்டே பாடுகிறேன். அதற்கு ஒரு ஆக்ஷேபனையுமிராதல்லவா'' என்று கூறிவிட்டு எழுந்து மேல் தட்டின் ஒரமாக அங்குமிங்கும் திரிந்து கொண்டே தன் ஆபாசப்பாட்டைப் பாடத்தொடங்கினுன்.

அனந்தன் தன்னைத்தானே புகழ்ந்துபேசத்தொடங்கி தைரியநாதம்பிள்ளையையும் கிருஷ்ணப்பனையும் நோக்கி “பார்த்தீர்களா நான் இவர்களை யெவ்வாறு அடக்கியாள வேண்டியிருக்கிறது. அதிலும் இந்த டக்கன் பரமதுஷ்டன். இரண்டு விஷயங்களில் அவன் பிரியம்போல் நடக்க விட்டு விட்டாலே பிறகு பெரிய கலகக்காரப் போக்கிரியாய்த் திரும்பி விடுவான். முரடன், அவனுக்குமேல் முரட்

டுத்தனம் காட்டினால்தான் அஞ்சியடங்குவான். போக்கிரி தன்னிலும் பெரிய போக்கிரிக்குத்தான் அடங்குவான். இது கிடக்கட்டும் உங்கள் சுகத்திற்காக இன்னொரு கிண்ணம் சாராயமருந்தலாமே. ஏன் வயோதிகரே! உமது பாட்டுவிருந்து நடக்கட்டுமே. சாராயம் என் சுகத்திற்கு நானே யருந்துகிறேன். அது போகட்டும் பாட்டைக் கூறும்'' என்று கூறிவிட்டு ஒரு கிண்ணம் சாராயத்தை யருந்திவிட்டு "எங்களைப்போன்ற கப்பற் கொள்ளைக்காரரெல்லாம் நீடுழிவாழ்க. யோக்கியர் கௌரவமானவர்கள் என்று கருதிக்கொள்வோரெல்லாம் அழிக!'' என்றான்.

தைரியநாதர் "என்னல் கூடுமானல் இச்சாராயம் குடிக்கச் சுகவாழ்த்து கூறப் பிரியமேயில்லை'' என்றார்.

அனந்தன்:—"ஓகோ நான் கூறியதால் தங்களுக்கு மனவருத்தமுண்டாயிற்று போலும். தாங்கள் தங்களைக் கௌரவமான யோக்கியர்களில் ஒருவராகக் கருதியிருக்கிறீரோ? தங்கள் தொழில் என்ன வர்த்தகமா? வேறு ஏதேனுமா? கூறும். அதன்மேல் நான் என் அபிப்பிராயத்தைக் கூறுகிறேன். இதோ இந்த வயோதிகர் பாட்டுப் பாடுகிறவரேனும் தையல்வேலை செய்கிறவர் என்று தெரிகிறது. தையற்காரர்கள் திருடுவதில் மிக்க கெட்டிக்காரர்களே இனி உலகில் மிக்க கௌரவமானவர்கள், நியாயஸ்தர், நீதிமான்கள், பெரிய மனிதர் என்று கருதப்படுவோர்களெல்லாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை எனக்குத் தெரிந்த வரையில் கூறுகிறேன் கேளும். 1வது யாவர்க்கும் நீதியளிப்போர், நியாய துரந்தரர் என்று கருதப்பட்டவர்களைப் பற்றி யொரு அனுபவமான திருட்டாந்தம் கூறுகிறேன் கேளும். இது

உண்மையாகவே நடந்த சங்கதியன்றி கட்டுக்கதையல்ல.

கடந்த வருடம் எங்கள் மாலுமிகளில் இருவர் கிழக்குத் தீவுகளில் ஒன்றில் கரையிறங்கி ஹோட்டலுக்குச் சென்றுக் குடித்துவிட்டு வேடிக்கையாய் வீதியில் வந்துகொண்டிருந்தபோது தற்செயலாக ஒரு அழகிய மாதைக் கண்டுக் கொஞ்சம் சந்தோஷமாய் அவளிடம் வார்த்தையாடினுர்கள். அவர்கள் துரதிஷ்டம் அப்பெண் அங்குள்ள ஒரு உயர்தர உத்தியோகஸ்தரின் புத்திரியாகவிருந்து விட்டாள். அந்த மூடர்களால் இவர்களுடைய சந்தோஷமான சம்பாஷணை குற்றமுள்ள மொழிகளாகக் கருதப்பட்டு இருவரும் சிறை செய்யப்பட்டு நீதவான் முன் நிறுத்தபட்டார்கள்.

விசாரணை நடந்து இருவரும் குற்றவாளிகளென்றே தீர்மானிக்கப்பட்டார்கள். ஆயினும் ஒருவன் மட்டும் ஒருவருடக் காவல் தண்டனை விதிக்கப்பட்டான். மற்றவன் எச்சரிக்கையோடு மன்னிக்கப்பட்டான். ஏனெனில் அவனுடைய சுற்றத்தான் ஒருவன் அவ்வூரில் செல்வவந்தனுகவிருக்கிறுன். அவன் நீதவானுக்கு நூறுபவுனளிக்கவே நீதவான் அக்குற்றவாளியை மன்னித்துவிட்டார்.

இதே மாதிரி ஒவ்வொருவரும் வெளிக்குமட்டும் யோக்கியரேயன்றி உண்மையில் நயவஞ்சகப் படுமோசத் துரோகிகளாகிய கள்ளரே. பகிரங்கமான கள்ளர் சூது வஞ்சகமின்றி நடப்பதால் இவர்களைவிட மிக்க யோக்கியரேயாவர். அவர்கள் தங்கள் தொழிலில் ஒருவித நீதியையனுசரித்தே நடக்கிறுர்கள். தாங்கள் வடநாட்டைச் சேர்ந்த பெரிய மனிதர் என்று கருதுகிறேன். அது மிக்க நேர்த்தியான தேசம். ஒரு புட்டி ஜின் சாராயத்திற்குச் சரியாக ஒரு மனிதன் விலை வாங்கி விடுவார்கள்'' என்றுன்.

தைரியநாதர்:—நான் வடநாட்டானல்ல. நான் சத்தத் தீவைச் சேர்ந்தவன்'' என்ருர்.

அனந்தன்:—''ஓ அது நேர்த்தியான பூமி. அவ்வூர் வர்த்தகர் மிக்க பெருந்தன்மையுடையோர். அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்ருல் ஒருநாளைய இலாபத்திற்காக தங்கள் மதத்தையே மறுதலித்து விடுவார்கள். அங்கு எப்போதும் பட்டப்பகலே. இருளே கிடையாது'' என்ருன்.

தமது நாட்டைப்பற்றிக் கேலியாய் அவன் பேசுவதைக் கேட்ட தைரியநாதருக்கு மனவருத்தமே யெனினும் யாவும் அடக்கிக்கொண்டு "ஆ! என்வரையில் உன்னிடம் வேலைசெய்யப் பிரியமுடையவனே'' என்ருர்.

அனந்தன் புன்னகையோடு "ஆ! என்னிடம் வேலை செய்யவா! பேஷ் சமயம்பார்த்து நடுக்கடலில் நங்கூரத்தை யறுத்துவிடவா? ஏன் சரியான சமயம் வாய்ந்தால் கண்ட கோடாலியால் என் மண்டைமேல் பின்பக்கம் ஒரேயடியாக வடிக்கத் தவிரமாட்டீரே. அப்படி யிருந்தும் தாங்கள் சத்தியவானன பெரிய மனிதனென்கிறீர். கிடக்கட்டும்'' என்று கிருஷ்ணப்பனை நோக்கி "ஏனையா! இனி நீர் ஒரு பாட்டுபாடுமே. பத்திரம் நேர்த்தியானதாக விருக்கட்டும்'' என்ருன்.

கிருஷ்ணப்பன் மாதரைப்பற்றிய பாட்டுகளைப் பாடத் தொடங்கினன். அனந்தன் "சேசே! இத்தகைய பாட்டுகள் வேண்டவே வேண்டாம். இவைபோன்றவற்றை யெவ்வளவோ கேட்டிருக்கிறேன். இவற்றைக் கேட்டால் நமது கப்பலில் அழகிய கன்னிகைகளிருக்கிருர்களென்று நினைப்புண்டாகும். இச்சாராயமும் இனி வேண்டாம். உன் பாட்டும் போதும்'' என்று கூறிவிட்டு அங்கிருந்த கலப்புச் சாராயப் பாத்திரத்தைக் காலால் தள்ளிவிட்டுத் துரிதமாய்

எழுந்தான். இவர்கள் தாராளமாய்க் குடித்தாலும் அப் பாத்திரத்தில் இன்னும் பாதி சாராயம் இருந்தது. அவன் சுறுசுறுப்பாகத் தேகத்தை யுதறிக்கொண்டு தலையணியைச் சரியா யணிந்துகொண்டு மேல்தட்டில் கப்பித்தான் இருக்க வேண்டிய விடத்திற்குச் சென்று கப்பல்களின் நங்கூரங் களைப் பாய்ச்சும்படி கட்டளையிட்டான். அக்கட்டளை சமிக்கைகளாலும் வார்த்தைகளாலும் அறிவிக்கப்பட்டன. இரண்டு கப்பல்களும் உடனே அக்கட்டளைக்குக் கீழ்ப் படிந்தன.

அனந்தன் எட்டச் சென்றதே தைரியநாதம் பிள்ளை பைரவி கிருஷ்ணப் பிள்ளையிடம் தமது துயரத்தை வெளி யிட்டுக்கொள்ளத் தொடங்கினர். அவர் பாடகனை நோக்கி, "நமக்குப் பெரிய சனியன் பிடித்தமாதிரியே. இவர்கள் கைதேர்ந்த முதல்தரமான கள்ளப்பயல்கள். ஆயினும் இப்பெண்களில்லாவிட்டால் நான் இவர்களுக்குச் சற்றும் அஞ்சமாட்டேன். இந்த வாலிபப் பயல், இப்போது அதி காரம் செலுத்துகிறவன் இயற்கையாகவே இத்தகைய கள் ளப்பயல்களின் குணமுடையவனாகத் தோன்றவில்லை" என்றார்.

கிருஷ்ணப்பன்:—"ஆம். இவனிடம் சில மாறான நற்குணங் களு மிருக்கின்றன. ஆயினும் இவனிடம் நாம் சிக் காமலிருந்தால் நலமாகவிருந்திருக்கும். அடடா நேர்த்தியான கலப்புச்சாராயம் இருக்கும் பாத்தி ரத்தை யுதைத்துவிட்டு என் நேர்த்தியான பாட்டை இடையில் தடுத்துவிட்டவன், இன்னும் என்ன செய் வானோ. இது பைத்தியக்காரர் செய்கையேயன்றி வேறென்ன?" என்றான்.

56-வது அத்தியாயம்.

கப்பல்கள் நங்கூரம் போடப்பட்டதும் அனந்தன் டக்கனைக் கூவியழைத்து தைரியநாதம் பிள்ளையும் கிருஷ்ணப்பனுமிருக்கு மிடத்தில் வந்து உட்கார்ந்து அவர்களை நோக்கி "இப்போது நான் குறுக்குத் தீவின் அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் வரையப்போகிறேன். அதில் உங்களைப் பொறுத்த விஷயமும் இருப்பதால் நீங்களும் அதை யறியவேண்டியது அவசியமே. அக்கடிதம் என் பெயராலும் டக்கன் பெயராலும் வரையப்படும். டக்கனுக்கு இடையிடையில் கௌரவம் கொடுக்க வேண்டுமென்பது என் விருப்பம். ஏன்? நான் கூறுவது உண்மைதானே டக்கா?" என்ருன்.

டக்கன்:—"ஆகா. நான் நீ யப்படிச் செய்வதில்லை யென்று கூறமுடியாது. ஆயினும் அது போலவே இடையிடையில் என்னைக் கீழே தள்ளி மிதித்தும் விடுகிருய்... ஆயினும் நான்...." என்பதற்குள்,

அனந்தன் "போதும் போதும் உன் பிரசங்கத்தை நிறுத்து" என்று கூறிவிட்டுக் கடிதத்தை யெழுதத்தொடங்கினுன்.

அக்கடிதத்தை யெழுதி முடித்தபின் யாவர்க்கும் அதை வாசித்துக் காட்டினுன். அதிற் பின்வருமாறு வரையப்பட் டிருந்தது:—

"குறுக்குத் தீவின் அதிகாரிக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும்.

ஐயன்மீர்! நமக்குள் நடந்த நிபந்தனைகளின்படி கரையில் உங்களிடம் பிணையாக விருக்கும் எங்கள் கப்பித்தானுக்கு ஈடாக நீங்கள் வாக்களித்தபடி ஒரு பிணையாளியை யனுப்பவில்லை. அதாவது எந்தப் பிணையாளியும்

எங்கள் கப்பலுக்கு வந்து சேரவில்லை. இப்படி அலட்சிய மாக நடத்துவதை நாங்கள் சகித்துக் கொள்ளும் சுபாவ முடையவர்களல்ல. நாங்கள் ஒரு அழகிய கப்பலையும் அதி லிருக்கும் ஒரு கௌரவமான குடும்பத்தையும் சாமான் களையும் பிரயாணிகளையும் பிடித்து எங்கள் வசத்தில் வைத் துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் எங்கள் கப்பித்தானை யெப்படி நடத்துகிறீர்களோ அப்படியே நாங்களும் இவர் களை நடத்துவோம் என்பதையிதனாற் றெரிவித்துக்கொள் கிறோம். தாங்கள் வாக்களித்தபடி எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் எங்கள் கப்பித்தானையும் அனுப்பா விட்டால் இந்த ஒரு கெடுதியல்ல இன்னும் பல தீங்குகள் உங்களுக்கும் உங்கள் நாட்டின் வர்த்தகத்திற் கும் நாங்கள் கட்டாயம் செய்யவேண்டியதாக விருக்கும். இப்படிக்கு" என்று அனந்தன், டக்கன் இருவருடைய கையொப்பமும் வைக்கப்பட்டிருந்தது.

அதை வாசித்துக் காட்டியபின் அனந்தன் தைரிய நாதரை நோக்கி "அந்த அதிகாரிகளுக்கு நீர் ஏதேனும் இரண்டு வரிகள் எழுதமாட்டீர்களா?" என்றான். அத் தகைய ஆபத்தான சந்தர்ப்பத்தில் கூட தைரியநாதம் பிள்ளை தமது பிடிவாதத்தை விடாமல் "நான் ஒருபோ தும் எழுதமாட்டேன். குறுக்குத் தீவின் அதிகாரிகளுக் குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையின்னதென்று நன்றாகத் தெரியும். நான் அத்தீவின் அதிகாரியாயிருந் தால்..." என்று அதற்குமேல் வெளிவரப்போன ஆத்திர மான வார்த்தைகளைக் கூறாமல் அடக்கிக்கொண்டார்.

அனந்தன் அவர் மனதிலிருந்ததை இன்னதென்று தெரிந்துகொண்டான். அவன் "தாங்கள் தட்டென்று நிறுத்திவிட்ட மாதிரியால் ஒரு நாடகத்தில்கூட தாங்கள்

பின்னால் கூறக்கருதியது இன்னதென்று யாவரும் அறிந்து கொள்வார்கள். தங்களிடம் ஒருவிதமான கடுகடுப்புத் தனமிருக்கிறது. அதற்காக என் தொழிலிலிருக்கும் ஆசாமிகளில் பெரும்பாலார் தங்கள் செவிகளைக்கொய்து தங்களுக்கே பொறித்துப் பதார்த்தமாக வைத்து விடுவார்கள். கோபாலன் கப்பித்தான் அதிகாரத்திலிருக்கும் போது ஒரு ஆளுக்கு அவ்வாறே செய்ததை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் நான் அத்தகைய ஆளல்ல. தாங்களாவது தங்கள் புத்திரிகளாவது அதிருப்தியாய் நடத்தப் படும்படி நேர்ந்தால் அது குறுக்குத்தீவு அதிகாரிகளின் குற்றத்தால் நேர்ந்ததாகுமேயன்றி எங்களால் நேர்ந்ததாகவிராது. ஆகையால் தாங்கள் தங்கள் நிலைமையையும் இருக்கும் நிபந்தனைகளையும் அந்த அதிகாரிகளுக்கு அறிவிப்பதே நலம் என்று நான் கருதுகிறேன்'' என்றான்.

அவ்வாறு அனந்தன் தூண்டியதால் தைரியநாதர் அந்த அதிகாரிகளுக்குத் தாங்கள் கடற்கொள்ளைக்காரரிடம் சிக்கிக்கொண்டிருக்கும் சங்கதியைத் தெரிவிக்கத் துணிந்து கடிதம் எழுதப் பேனாவைக் கையிலெடுத்தார். எழுத முயன்றார். என்ன முயன்றும் ஒருவார்த்தைகூடச் சரியாக வரைய அவரால் முடியவில்லை. இன்னதென்று விளங்காத விதமாய் இரண்டொரு வார்த்தைகளைக் கிறுக்கியபின் அனந்தனை நோக்கி "என்னால் முடியவில்லை. எத்தனைபேர் ஆபத்தில் சிக்கியிருப்பதாயினும் இக்கடிதத்தை வரைய என்னால் முடியாது'' என்றார். அவர் மனதிலிருந்த வேதனையை எப்படி வெளியிட அவரால் முடியவில்லையோ அப்படியே அதை யெழுத முயன்றபோதும் அவர் தேகம் முழுமையும் நடுக்கலெடுத்தது. வேகமாய் அடிக்கும் காற்றிற்கு ஒரு பலமில்லாத நாணல் தப்பித்துக்கொள்கிறது. ஆனல் உறுதியான ஒரு விருட்சமோ அழிந்துபோகிறது.

அதுபோலவே மிக்க தைரியமுள்ள உறுதியான மனமுடையவர்களைக் காட்டிலும் மிருதுவான கோழை மனமுடையோர் இத்தகைய சந்தர்ப்பங்களில் மனக்கலக்கத்தின் வல்லமைக்குப் தப்பித்துக்கொண்டு நிதான குணமுடையவர்களாக விருக்கிறார்கள்.

அதுபோலவே தைரியநாதம்பிள்ளை தமது பெயரின் குணத்திற்கு மாறாக கடிதம் வரைய மனோதிடனற்றவராக விருக்க பைரவி கிருஷ்ணப்பன் உடனே பேனாவையெடுத்துக்கொண்டு எழுதத் தொடங்கிச் சுருக்கமாகவே தாங்கள் கடற்கொள்ளைக்காரரிடம் சிக்கிக்கொண் டிருப்பதையும் தங்களுக்கு நேரிடக்கூடிய துன்பங்களையும் விளக்கிக்காட்டி, திட்பமாய் நகர அதிகாரிகள் குற்றவாளிகளைத் தண்டிப்பதைக்காட்டிலும் தங்களைச் சேர்ந்த ஒரு கௌரவமான குடும்பத்தின் க்ஷேமத்தையும் மானத்தையும் சிரேஷ்டமாகக் கவனிப்பதே முக்கியமென்று தெரிவித்தான். கள்ளர்களுக்குக் கோபமுண்டாக்காத விதமாய் மிக்க சாமார்த்தியத்தோடு கடிதத்தை யெழுதி முடித்தான். அனந்தன் அதை வாசித்துப் பார்த்து நற்காலமாய் அங்கீகரித்துக் கொண்டான். அக்கடிதத்தின் அடியில் பைரவி கிருஷ்ணப்பன் என்று கையொப்பமிருப்பதைக் கண்ட அனந்தன் மிக்க வியப்படைந்து சந்தோஷத்தோடு வயோதிகனை நோக்கி, "ஓகோ! இரண்டு வருடங்களுக்குமுன் வசந்த காலத்தில் சிறு நகர் இரங்கப்பிள்ளையின் வீட்டில் நாடகம் நடந்தபோது நீ பிடீல் வாசித்தாயல்லவா? நான் அந்த நாடகத்தில் இராஜவேடந் தரித்திருந்தேனே நினைவிருக்கிறதா?" என்றான்.

இவ்வாறு அனந்தனுக்கும் தனக்கும் அறிமுகம் நேர்ந்ததையுணர்ந்த கிருஷ்ணப்பன் மிக்க சந்தோஷமடைந்து இதுதான் சமயமென்று அனந்தனை நோக்கி

"ஆகா! இந்நேரம் உன்னை யடையாளம் கண்டுபிடிக்காம லிருந்து விட்ட என் மூடத்தனத்தை யென்னென்று கூறு வேன். அன்று நாடகம் உன்னுலேயே சிறப்படைந்ததை யார் தான் மறக்கக்கூடும். அந்த வேடத்திற்கு நீயே பிறந் தவன் என்றே கூறுவேன்" என்ருன்.

அனந்தன் தற்புகழ்ச்சிக்காரன், தன்னைப் பிறர் புகழ் வதை மிகவும் விரும்புகிறவன்; ஆகையால் கிருஷ்ணப்பன் கூறியதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்ததோடு "பெரிய வரே! நீர் கூறியது உண்மையே. நான் எந்த நாடகசாலை யையும் ஒரு புரட்டுப் புரட்டிவிடக் கூடுமென்றே நினைக்கி றேன். நான் நாடக மேடைகளில் பிரக்யாதி பெறுவதற் கென்றே பிறந்தவன். ஆ! பழைய நண்பரே! இப்போது உம்மிடம் ஒரு சங்கதி கூறுகிறேன், கொஞ்சம் இப்படி வாரும்" என்று கிருஷ்ணப்பனைச் சற்று எட்ட அழைத் துப்போய் மேல் தட்டிலுள்ள கிராதியின் பக்கம் குனியச் செய்து தானும் குனிந்து அவன் செவியில் மெதுவாய் "இந்தக் கௌரவமான பெரிய மனிதருக்காகவும் அவர் புத்திரிகளுக்காகவும் மெய்யாகவே நான் மிக்க விசனிக் கிறேன். அதோடு அக்கன்னிகைகளில் ஒருத்தியைப் பாதுகாக்க நான் ஒரு காரணத்தால் கடமைப்பட்டிருக் கிறேன். நானும், பிரியமுள்ள ஒரு கன்னிகையிடம் சந் தோஷமாய் நடந்து கொள்பவனே. ஆனால் இத்தகைய யோக்கியமும் நற்குடி பிறந்தவர்களுமாகிய கன்னிகை களுக்கு ஒருபோதும் தீங்கிழைக்க நினைக்கவே மாட் டேன்" என்ருன்.

கிருஷ்ணப்பன் அவனுக்குச் சந்தோஷமுண்டாகும் படி நல்ல வார்த்தைகளைக்கூறி, "என் அபிப்பிராயப்படி உன்போல் அந்த நாடகத்தில் பிரசித்தி பெறக்கூடியவன் வேறு எவனுமில்லை" என்ருன்.

அனந்தன் கிருஷ்ணப்பனுடைய கரத்தைப்பற்றிக் குலுக்கி, "ஹா! நண்பரே! பொது ஜனங்களுக்குமட்டும் உனக்கிருக்கும் புத்தி சூக்குமம் இருந்தால், நான் இத் தகைய நிலைமையிலிருக்கமாட்டேன். ஓ! என் அன்பார்ந்த நண்பரே! என்னிடம் உண்மையான அன்புடைய ஒரு நண்பன் மட்டும் என்னோடுகூட கப்பலில் இருப்பதாயின் நமக்குப் பிரியமான நேர்த்தியான பாட்டுகளைப் பாடிக் கொண்டு எவ்வளவோ ஆனந்தமாக விருக்கலாமே. இங்கிருக்கிறவர்களில் பெரும்பாலர் இவ்விஷயத்தில் மிருகங்களேயாகும். அதோ அக்குறுக்குத்தீவில் பிணையாக விருக்கிறானே (குலசேகரன்) அவனோ, நான் டக்கனை யெப்படி நடத்துகிறேனோ அப்படி என்னை நடத்துகிறவன். நான் அவனுக்கு எவ்வளவு அதிகமாக நன்மை செய்கிறேனோ அவ்வளவதிகமாய் என்னைக் கசக்குவான். நல்ல வசந்த காலத்தில் நீ பின்பாட்டிற்கிருக்க நான் நடிப்பதாயின் எத்தகைய நேர்த்தியாயிருக்கும் தெரியுமா?" என்றான்.

அவன் கூறுவதைக்கேட்ட கிருஷ்ணப்பன், அடடா! இவனுக்குச் சாராயவெறி யொருபக்கம் ஏறிவிட்டது. அதோடு தற்பெருமையின் வெறியும்கூடச் சேர்ந்துவிட்டது. இவன் ஒரு சமயம் இந்த வெறியில் தான் பெருமையடையலாமென்று கருதி நம்மைப் பலவந்தமாகவே தன்னோடு நிறுத்திக்கொள்வானோ வென்று பெருந்திகிலடைந்து விட்டான். ஆகையால் அவன் தன் கரத்தைப் பற்றிக் குலுக்கியதற்குப் பதிலாகத் தானும் மெதுவாய்க் குலுக்கிவிட்டு, "அந்தோ!" என்றுமட்டும் கூறினான்.

அனந்தன் உடனே "என் நண்பனே! நீ கூறுவது சரியே. இவையாவும் வீண் கனவுகளே. துரதிட்டம் பிடித்த அனந்தன் தான் பிரியவேண்டிய நண்பனுக்கு இப்போது

தன்னாலான உதவிசெய்யவேண்டிய வேலையே பாக்கியிருக்கிறது. உன்னையும் அந்த இரண்டு கன்னிகைகளையும் கரையில் இறக்கிவிடவும் உங்களுக்குப் பாதுகாப்பாய் டக்களை யனுப்பவும் தீர்மானித்திருக்கிறேன். ஆகையால் சீக்கிரம் அக்கன்னிகைகளைக் கூப்பிடு. நீ நான் கொடுக்கும் கடிதத்தைத் தீவின் நியாயாதிபதிகளிடமளித்து, உன் வாக்கு சாதுரியத்தால், அவர்கள் குலசேகரனுக்கு எள்ளளவு தீங்கேனும் செய்தால் அவர்களுக்குப் பெரிய ஆபத்து நேருமென்று நன்றாகத் தெரியும்படி அறிவிக்கவேண்டும்'' என்றான்.

அனந்தன் அம்மாதிரி கூறியதைக் கேட்டதே கிருஷ்ணப்பன் சற்று நிம்மதியடைந்தான். ஏனெனில் அவன் தன்னை அனுப்பிவிடுவான் என்றும், பலவந்தமாக நிறுத்திக் கொள்ளமாட்டானென்றும் தெரிந்துகொண்டான். அதன் பிறகு அவன் சந்தோஷத்தோடு துரிதமாய் அங்கிருந்து புறப்பட்டு ஏணிவழியாக விறங்கிக் கீழ்த் தட்டிற்குச் சென்றான். அங்கு சென்றபின் தான் கூறவந்த சங்கதியை யெவ்விதமாகக் கூறுவதென்று அவனுக்கு விளங்கவில்லை. சகோதரிகள் எதிர்பார்க்காத விதமாய்த் தாங்கள் விடுதலையடைவதை யறிந்ததே மிக்க சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் உடனே தங்கள் போர்வைகளை யணிந்துகொண்டு தங்களைக் கரைக்குக் கொண்டுபோகப் படகு ஆயத்தமாகவிருக்கிறதென்பதை யறிந்து துரிதமாக மேல் தட்டிற்குச் சென்றார்கள்.

ஆனால் அவர்கள் தங்கள் தந்தையும் தங்களோடு வந்து விடுவார் என்று கருதினார்கள். மேல் தட்டிற்கு வந்ததும் தங்கள் தந்தை கப்பலிலேயே யிருப்பார் என்பதை யறிந்து மனமுடைந்து விட்டார்கள். மீளள் "அப்படியாயின் என்ன ஆபத்து நேர்வதாயினும் சரி, நாம்

நமது தந்தையிடமே யிருக்கவேண்டும். ஒரு வினாடி நேரத்திற்காயினும் நாம் அவரருகிலிருந்தால் அவருக்கு உதவியாக விருக்கலாகு" மென்றாள்.

புனிதவதி இருக்கும் சந்தர்ப்பத்தின் நிலைமை யித்தகையதென நன்குணரும் அறிவாளியாகையால் தன் தமக்கையை நோக்கி,

"அக்கா! நாம் இங்கிருப்பதைவிட அங்கு சென்றால் நம் தந்தைக்கு மெய்யான உதவிசெய்யலாம். எப்படியெனில் இருக்கும் நிலைமையைக் கூறி அதற்குத் தக்கபடி அவர்களை நடந்து கொள்ளும்படி செய்யலாகும். அது தான் செய்யவேண்டிய சரியான காரியம்" என்றாள்.

இரண்டு கன்னிகைகளின் வார்த்தைகளையும் கேட்ட அனந்தன் சந்தோஷத்தோடு புனிவதியை நோக்கி உற்சாகத்தோடு "பேஷ்! நல்ல முன்யோசனையும் புத்திசாதுரியமுமுள்ள தேவ கன்னிகை கூறுவது போன்ற மொழிகள். நீங்கள் உடனே புறப்படுங்கள். ஏனெனில் மறுநிமிடம் யாரார் புத்தி யெப்படி மாறிவிடுமோ" என்றான்.

தைரியநாதம் பிள்ளை தன் புத்திரிகளை நோக்கி, "என் குழந்தைகளே! உடனே புறப்பட்டுச் செல்லுங்கள். நான் கடவுள் கையிலிருக்கிறேன். அவரையே நம்பியிருக்கிறேன். என் மனசாட்சியின்படி நான் ஒருவர்க்கும் தீங்கு செய்ததில்லை. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற ஆன்றோர் வாக்கை நான் பூரணமாய் நம்பியவன். நீங்கள் இதைவிட்டுச் சென்றபின் எனக்கு எதைப்பற்றியும் பயமில்லை. நான் உயிருள்ள மட்டும் இந்த நற்குணமுள்ள புண்ணியவான் இதைவிடக் கௌரவமான ஒரு தொழிலில் பிரவேசிக்கும்படி ஆண்டவன் அருள்புரியுமாறு சதா பிரார்த்தித்துக்கொண் டிருப்பேன். போங்கள் போங்கள்

சீக்கிரம்" என்றார். ஏனெனில் அப்பெண்கள் இன்னும் தடுமாற்றத்தோடேயே யிருந்தார்கள்.

அனந்தன் "இன்னும் நீங்கள் ஆலசியம் செய்யவேண் டாம். சீக்கிரம் போய்ப் படகில் ஏறுங்கள். டக்கன் உங் களை க்ஷேமமாகக் கரையில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற் குப் பொறுப்பாளி. ஆனால் டக்கன் இங்கு திரும்பிவந்து சேர்வதற்கு யார் பொறுப்பாளியோ? ஆயினும் நமது கிருஷ்ணப்பிள்ளையின் சத்திய நடக்கையே அதற்குப் பொறுப்பாக நான் பூர்ணமாய் நம்புகிறேன்" என்றான்.

அவ்வாறு கூறியபின் அனந்தன் தன்னிடமிருந்த ஒரு இரட்டைக்குழல் துப்பாக்கியைக் கிருஷ்ணப் பிள்ளை யிடம் நீட்டி "இதில் இரண்டு குண்டுகள் போட்டு கெட்டிக் கப் பட்டிருக்கின்றன" என்றான். கிருஷ்ணன் அதை வாங் கிக்கொள்ள கரத்தை நீட்டியபோது அவன் கரம் நடுங்கு வதைக் கண்ட மீனாள்! அத்துப்பாக்கியை அனந்தன் கரத் திலிருந்து வாங்கிக்கொண்டு "அய்யா! இதை யென்னிட மளித்து விடும். நான் இதைக்கொண்டு என்னையும் என் தங்கையையும் காப்பாற்றிக் கொள்வேனென்று பூரண மாய் நம்பும்" என்றாள்.

அனந்தன்:—"பேஷ் பேஷ்! இத்தகைய கன்னிகையே தீர முடையவள். வீரத்தன முடையவள். இவளே எங் கள் அரசனாகிய குலசேகரனுக்குத் தக்கவள்" என் றான்.

மீனாள்:—"நீ இரண்டு முறை பிரஸ்தாபித்த அந்தக் குல சேகரன் என்பவர் உனக்குத் தெரியுமோ? என்று கேட்டாள்.

அனந்தன்:—"அவர் தெரியுமா? கடலில் யாத்திரை செய்கிற வர்களில் இணையற்ற தைரியசாலியும் சூரனுமாகிய அவனைப்பற்றி என்னைவிட நன்றாக அறிந்தவர்கள்

யார் இருக்கிறார்கள். ஆச்சு எப்படியும் இக்குறுக்குத் தீவார் அவனைச் சீக்கிரத்தில் விட்டேதீரவேண்டும். அப்போது அவன் தன் கப்பலுக்கு வந்து விடுவான். நீயும் வந்து விட்டால் நீ கடல்களுக்கெல்லாம் அரசியாயிருப்பாய். சரி, இனிப்படகேறிச் செல்லுங்கள். இந்த டக்கன் உன்னை யெள்ளளவேனும் அவமரியாதையாக நடத்தினால் உடனே நீ உன் கையிலிருக்கும் துப்பாக்கியின் குதிரையை யிறக்கவேண்டியது தான். டக்கனுக்கு அது தகுதியான தண்டனையேயாகும். ஆனால் நான்தான் என் முரட்டு ஆட்களில் ஒருவனை யிழந்து விடுவேன். இருக்கட்டும் ஒருமுறை கை கொடுங்கள்'' என்றான்.

இரண்டு பெண்களும் நாணத்தோடும் உள்ளத்தில் வெறுப்போடும் தங்கள் கரங்களை நீட்டினார்கள். அனந்தன் அவர்கள் கரங்களைப்பற்றிக் குலுக்கிவிட்டு "இனிப் படகில் ஏறுங்கள்'' என்றான். கன்னிகைகளும் கிருஷ்ணப்பனும் உடனே படகில் ஏறியதும் டக்கன் அவர்களுக்குக் காவலாய்க் கூட ஏறிக்கொண்டான்.

அனந்தன் இப்போது செய்த நல்ல காரியம் அவனுக்கே மிக்க வியப்பையும் சந்தோஷத்தையும் அளித்தது. அவன் "ஆ. நான் இக்காரியத்தைச் செய்ததாக என் போன்ற மற்ற கப்பற்காரர்கள் கேள்விப்பட்டால் அடடா என்ன சொல்வார்களோ. என்ன சொன்னாலும் சொல்லிக் கொள்ளட்டும். கெட்ட காரியங்களையே செய்து செய்து போதுமென்றாய்விட்டது. ஒருமுறையேனும் மனிதன் ஒரு நல்ல காரியத்தைச் செய்யவேண்டுமல்லவா? அப்படிச் செய்வதால் ஒருவனுக்கு உள்ளத்தில் தானே மகிழ்ச்சியுண்டாகிறது'' என்றான்.

இச்சந்தர்ப்பத்தில் அனந்தன் கூறியது உண்மையே.

அது இயற்கையே; அது மேலும் மனச்சாட்சியின் உண்மையைத் தெரிவிக்கிறது. ஒருவன் எத்தகைய அயோக்கியனுக விருந்தாலும் தான் செய்தகாரியம் குற்றமுள்ள தென்றும், பாபமான தென்றும், நல்ல காரியமென்றும், கெட்ட காரியமென்றும் அவனுக் குள்ளாகவே தோன்ருமற் போகாது. அது தோன்ருதாயின் கடவுள் நமது குற்றத்திற்கு நம்மைத் தண்டிப்பது ஒருபோதும் நியாயமாகாது. அவ்வாறு எது நமது செய்கைகள் குற்றமென்றும், குற்றமற்ற தென்றும் உள்ளுக்குள்ளேயே உணர்த்துகிறதோ அது தான் மனச்சாட்சி என்பது. அம்மனச்சாட்சி அவரவர்களின் கன்ம பலன்படி சிலருக்கு நன்ருய்ப் பிரகாசிக்கும்; சிலருக்கு மந்தமாய்த் தோன்றும்; சிலருக்கு அந்த உணர்ச்சியே யிராது. அத்தகையோர் கேவலம் மிருகங்களுக்குச் சமமாவர். எவனெருவன் அம்மனச்சாட்சி குற்றமென்று கூறும் காரியத்தைச் செய்யாமல் விடுகிருனே, எவன் மனச்சாக்ஷி கூறுகிறபடி நடக்கிருனே அவன் இம்மானிடச் சன்மத்தால் நாம் அடையத் தக்கதான மோட்சப் பேற்றை யடைவான். எவ்வாறெனின், எப்போது பாபகாரியங்களைச் செய்யாது விடுகிருனே அப்போது கெட்ட கன்மம் சேராதொழியும்; அது ஒழியவே நற்கருமமே சேரும். அந்த நற்கரும பயனுல் சித்தசுத்தி யுண்டாகி, சித்த சுத்தித் துவாரா மோக்ஷ இச்சை சனித்து ஞானேதயம் பெற்று நித்தியானந்தப் பேற்றை இரண்டொரு சன்மங்களிலேனு மடைவான். மேலும் மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடப்பவன் மனம் எப்போதும் களங்கமின்றி, அச்சமின்றி நிம்மதியுடையதாகவே யிருக்கும்.

57-வது அத்தியாயம்.

மீனுள், புனிதவதி முதலியவர்கள் படகேறிச் சென்ற பின் அனந்தன் தைரியநாதம் பிள்ளையை நோக்கி "பெரியோரே! தங்கள் புத்திரிகள் மிக்க நேர்த்தியானவர்கள். மூத்தவளாகிய மீனுள் நாடகமேடையில் நடித்தால் மிக்க பிரக்யாதியடைவாள். அவள் ஒரு சுத்தவீரனைப் போல அந்தத் துப்பாக்கியை வாங்கிக்கொண்ட காட்சி நாடக சாலையிலுள்ள சபை பிரமிக்கச்செய்யும். சிறியவள். மிக்க நாணமும் அச்சமும் உடையவள். ஆயினும் சங்கீதத்தில் மிக்க பிரசித்தி பெறக்கூடியவள்...." என்றிவ்வாறு புகழ்ந்து கூறினன்.

அவன் கூறிய மொழிகளால் தைரியநாதம்பிள்ளைக்கு மிக்க வெறுப்பேயுண்டாகும். ஆயினும் அனந்தன் கூறியது அவர் செவியில் ஏறவேயில்லை. ஏனெனில் அச்சமயம் அவர் தமது தூரதிருஷ்டிக் கண்ணுடியை யெடுத்து கரையை நோக்கிச் செல்லும் படகையே பார்த்துக்கொண்டிருந்தார். சற்றுநேரத்திற்குள் அவர்கள் கரைபோய்ச்சேர்ந்தார்கள். புனிதவதியும் மற்றவர்களும் ஒரு பக்கமாய்ச் செல்ல மீனுள் திடீலென்று யாரும் தாக்காதபடி எச்சரிக்கையாய்க் காவலிருப்பவள்போல் சற்று எட்ட ஒருபக்கமாய்ச் சென்றுள். இவர்கள் அங்கிருந்த மேட்டில் ஏறி நகரை நோக்கிச் சென்றுர்கள். கடைசியில் அவர் பார்ப்பதை நிறுத்தப்போகும் சமயம் அவர்கள் தட்டென்று நின்றதும் டக்கன் அவர்களை விட்டுத் திரும்பிவிட்டது அவருக்கு மிக்க திருப்தியை யுண்டாக்கிற்று. டக்கன் கடலோரம் படகிருக்கும் இடத்தை நோக்கி வருவதைக் கண்டபின் கடவுளைத் துதித்து "இனி நமக்கு என்ன நேர்ந்

தாலும் அவசியமில்லை'' என்று தமக்குத் தாமே கூறிக் கொண்டு தீரமடைந்தார்.

கரையில் அந்த விடத்தில் டக்கன் தட்டென்று அவர்களை விட்டுப் பிரிந்ததன் காரணம் வேறு. அதென்னவெனில் சற்று தூரத்தில் சில போர் வீரர்கள் நகரத்திலிருந்து தங்கள் எதிரில் வருவதைக்கண்டான். கள்ளனுக்கு எப்போதும் அத்தகையோரைக்கண்டால் பீதிதானே. அதனால்தான் அவன் திரும்பி விட்டான். தைரியநாதர் அவர்களைக் காணவில்லை. ஏனெனில் டக்கன் முதலியவர்கள் இருந்த விடத்திற்கு முன் ஒரு மேடிருந்ததால் தூரத்திலிருக்கும் இவருக்கு அந்த வீரர்கள் புலப்படவில்லை.

டக்கன் திரும்பியபோது மீனாள், அவனை விளித்து "நில் நான் கட்டளையிடுகிறேன். நான் கூறுவதை யுன் தலைவனிடம் சென்று கூறு. அதென்னவெனில் குறுத்குத் தீவு அதிகாரிகள் எத்தகைய விடையளித்தாலும் சரி உங்கள் கப்பலை யுடனே சிறு நகர்த் துறைமுகத்திற்குக் கொண்டு போகச்சொல். அங்கிருந்து பெரிய பாலத்தை நோக்கிக் கொண்டிருங்கள். பெரிய பாலத்தின்மேல் தீ யெரிவதைக் கண்டதே குலசேகரனை யேற்றிக்கொண்டு செல்ல படகு கொண்டு வரவேண்டும். இச்சங்கதியை நான் கூறியதாகக் காப்டென் அனந்தனிடம் கூறு'' என்றாள்.

டக்கன் அவ்வளவு சுலபமாய் அக் கன்னிகைகளை விட்டு வந்துவிட்டிருக்க மாட்டான். அனந்தனுக்காவது வேறு விஷயங்களுக்காவது அஞ்சமாட்டான். ஆனால் குலசேகரன் பெயரை நினைக்கும்போதே யவனுக்கு நடுக்கமுண்டாவதாக விருந்தது. அதோடு பெண்பாலாகிய மீனாள் துணிகரமாய்த் தன் கையில் துப்பாக்கியைப் பிடித்திருந்த மாதிரியைக் காணும்போது அவனுக்கு உள்ளத்தில் அச்ச

மாகவே யிருந்தது. அதனால்தான் அவன் பேசாமல் அவர்களுக்கு வந்தனமளித்து விட்டுத் திரும்பிவிட்டான்.

மீனாளும் மற்றவர்களும் எதிரில் வரும் வீரர்களை நெருங்கும்போது புனிதவதிக்கு டக்கன் திரும்பிவிட்டதே கொஞ்ச நஞ்சம் இருந்த பீதி யடியோடு நீங்கிவிட்டதால் தன் தமக்கையை நோக்கி,

"அக்கா ! அய்யோ கடவுளே! நாம் எத்தகைய மனிதர்களின் கையிலிருந்து தப்பித்து வந்தோம்!" என்றாள்.

மீனாள்:--என்? தைரியமான வீரர்களிடமிருந்துதான்" என்றாள்.

பைரவி கிருஷ்ணப்பன்:—"நீ எவ்வளவு தைரியமென்று எண்ணுகிறாயோ அவ்வளவு தைரியவான்களாகவே யிருக்கட்டும். ஆனால் மிக்க அபாயகரமான கள்ளப் பயல்களே. அந்தப்பயல் அனந்தன் என்பவனை நான் அறிவேன். அவன் எத்தகைய கொலைபாதகத்திற்குமஞ்சாத படுபோக்கிரிப் பயல். அவன் இதற்கு முன்னமே தூக்கு மரத்தைத் தரிசித்ததிருப்பானென்று யாவரும் கருதியிருந்தார்கள்" என்றான்.

மீனாள்:—"அதைப்பற்றி யக்கரையேயில்லை. வேலைக்காரர்கள் எவ்வளவு அதிக முரடர்களாயிருக்கிறார்களோ அவர்களை அடக்கியாளும் ஆள் அவ்வளவுக்கவ்வளவு அதிக தைரியமுள்ள வீரனாகவிருக்கவேண்டும். அவர்களில் மிக்க பயங்கரமான முரடர்களையெல்லாம்கூட குலசேகரன் என்றபெயர் மட்டுமே நடுங்கச்செய்கிறது" என்றாள்.

புனிதவதி:—"குலசேகரனுக்காக நான் விசனப்படுகிறேன். அவன் கூட்டாளிகள் இத்தகையோராக விருந்தார்களாயின்........ஆயினும் நமது தந்தையை நினைக்கும்

போது அவனைப்பற்றி எனக்குச் சற்றும் அக்கரையில்லை'' என்றாள்.

மீனுள்:—''விசனத்தை யதை வேண்டுகிறவர்களுக்கு உபயோகப்படுத்து. நமது தந்தைக்காக நீ பயப்படவேண்டிய அவசியமேயில்லை. அவருடைய சிரசிலிருக்கும் ஒவ்வொரு வெள்ளை மயிரும் எனக்கு ஒவ்வொரு வெள்ளிச்சுரங்கம் மாதிரியே. ஆனால் அந்தக் கப்பலிலிருக்கும்போது அவருக்கு எள்ளளவு இடையூறும் நேராதென்றும், கூடிய சீக்கிரத்தில் அவர் க்ஷேமமாகவே கரைக்குவந்து சேர்வாரென்றும் நான் நன்கறிவேன். அவ்விஷயத்தில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு'' என்றாள்.

கிருஷ்ணப்பன்:—''அதை யனுபவத்தில் அறிந்த பின்பே நம்பவேண்டும். குலசேகரன் நான் பயப்படுகிறபடி அத்தகைய ஆளாகமட்டுமிருந்தால் குறுக்குத்தீவு ஆட்கள் தைரியநாதம் பிள்ளைக்காக அவனை விட்டுவிட மாட்டார்கள் என்று நான் அஞ்சுகிறேன். இத்தகைய விஷயங்களில் அவர்கள் நீதியை மிக்க திட்டமாகக் கவனிக்கும் ஆசாமிகள்—'' என்றான்.

புனிதவதி:—''இருக்கட்டும். அதோ நமக்கு முன் வருகிறவர்கள் யார்? அவர்களேன் நம்மைக் கண்டதே நிற்கிறார்கள்?'' என்றாள்.

கிருஷ்ணப்பன்:—''அவர்கள் இராணுவத்தைச் சேர்ந்த காவல்காரர்கள். அவர்கள் நாம் கரையிறங்குவதைக் கண்டு நாம் அந்தக் கள்ளக்கப்பலிலிருந்து வருகிறவர்களாக்குமென்று கருதியே நின்றார்கள். இப்போது அருகில் வரவர நீங்கள் இருவரும் பெண்பாலர் என்று தெரிந்துகொண்டிருப்பார்கள்'' என்றான்.

அந்தப் பாராக்காரர்கள் இவர்களை நெருங்கி வந்த

போது கிருஷ்ணப்பன் கூறியது உண்மையே யென்று தெரிந்தது. அவர்கள் கள்ளக்கப்பலின் போக்கைக் கவனிக்கவும் அக்கப்பலிலுள்ளவர்கள் கரையிறங்கி வந்து ஊருக்கு ஏதும் தீங்குசெய்யாதபடி தடுப்பதற்காகவுமே வேவு ஆட்களாக அனுப்பப்பட்ட போர்வீரர்களே என்று தெரிந்தது.

அவர்களில் பலர் பைரவி கிருஷ்ணப்பனை யறிந்தவர்களானதால் அவர்கள் இவனைக் கண்டதும் மிக்க சந்தோஷத்தோடு அவனுடன் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் கன்னிகைகளைக் கண்டதே அவர்களுக்கு மரியாதை செய்து அவர்கள் ஆபத்தில் சிக்கிக்கொண்டதற்காகத் துயரம் காட்டினார்கள். பிறகு அவர்கள் தந்தையை மீட்பது கஷ்டமென்பதைப் பற்றிச் சாடையாய்க் கூறினார்கள்.

கடைசியில் அவர்கள் நகரம்போய்ச் சேர்ந்தார்கள். கன்னிகைகள் உடனே நகர அதிகாரியைக் கண்டுத் தங்கள் தந்தையின் விடுதலையைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

அதன்படியே அவர்கள் நகர மண்டபத்திற்குச் சென்றார்கள். அச்சமயம் அங்கு நகர அதிகாரியும் இரண்டொரு நியாயாதிபதிகளும் இருந்தார்கள். அவர்களால் தைரியநாதம் பிள்ளையை விடுவிப்பதில் உள்ள கஷ்டம் எத்தையதென்று தெரிந்தது. இவர்கள் சங்கதிகளைக் கேட்டபின் நகர அதிகாரி,

"இப்போது இராஜாங்க யுத்தக்கப்பல் அருகில் வந்திருக்கிறது. அது முன்னமே இக்கள்ளக்கப்பலைப் பார்த்து தேடிக்கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் நான் சந்தேகப்பட்ட கப்பலின் தலைவனை விடுதலை செய்துவிட்டால் நான் அதற்குப் பொறுப்பாளியாக விருக்கவேண்டும். அதனால்

எனக்கு ஆபத்துண்டாகும். இச்சந்தர்ப்பத்தில் நமது நாட்டார் எத்தகைய பெருந்தன்மை யுடையவர்கள் ஆபத்தில்சிக்கியிருப்பதாயினும் அதைப்பற்றி யவர்கள் கவனிக்க மாட்டார்கள். மேலும் இப்போது சிக்கியிருக்கும் ஆசாமி இக்கப்பற்கொள்ளைக்காரருக்கெல்லாம் மூல புருடனாக விருக்கிறானென்று தெரிகிறது. இத்தகைய ஆளை ஊரைக் கொள்ளையடிக்கவும் ஊருக்குத் தீங்கு செய்யவும், இன்னும் அரசனுடைய கப்பலையே யெதிர்த்துச் சண்டையிடவும் விட்டுவிட்டால் என் கதி யென்னாகும். அவன் அத்தகைய காரியங்களைச் செய்யக்கூடியவனே யென்று நன்றாய்த் தெரிந்திருக்கிறது" என்றார்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதே மீனாள் தன் காதலனை யவ்வாறு கூறுவதைக் கேட்கச் சகிக்காதவளாய் "ஏன் அத்தகைய தீரபுருடன் என்று கூறுமே" என்றாள்.

அதிகாரி:—"ஏன் நீ அதைப்பற்றி எப்படி வேண்டுமாயினும் கூறிக்கொள்ளலாம். ஆனால் என் அபிப்பிராயத்தில் ஒரு தனி மனிதன் கண்மூடித்தனமாய் இரண்டு பேரோடு சண்டைக்குச் செல்வது தைரியம் என்று கூறுவதைவிட முரட்டுத்தனமான மூடத்தனம் என்றே கூறுவேன்" என்றார்.

புனிதவதி:—"ஆனால் எங்கள் தந்தை! ஊராருக்கெல்லாம் சிநேகிதர், யாவரிடத்தும் கருணையுடையவர், யாவர்க்கும் உபகாரபுருடர், யாவராலும் விரும்பப் பட்டவர், தருமகுணமுடையவர், அவர் எப்படி விடுதலையடைவது. பெரியோராகிய நகர அதிகாரிகளே! மூடத்தனமுடைய அடியேன் வார்த்தையைக் கொஞ்சம் ஏற்றுக்கொள்ளும். அந்த ஆள் சிறையிலிருப்பதாகத் தெரிகிறது. சிறைச்சாலைக் காவலர் கொஞ்சம் கவனப்பிசகாய்க் கதவைப் பூட்டாமல்,

போகட்டும், சற்றுநேரம் தாளிடாமல் வேறு வேலைக்குச் சென்றிருக்கட்டும். அந்தக் கப்பற்கொள்ளைக்காரன் நமது எல்லையை விட்டொழிந்து விடுவான். நிரபராதியும், சத்தத்தீவின் தந்தைபோன்றவரும், யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவருமாகிய எங்கள் தந்தை கள்ளரிடமிருந்து விடுவிக்கப்பட்டு அவரை விட்டால் அனுதரவாயிருக்க வேண்டிய தமது புத்திரிகளிடம் வந்து சேருவார். அத்தகைய ஒரு பெரியமனிதரைப் பிராணாபத்தினின்றும் காப்பாற்றுவதற்காக ஒரு அற்பமனிதனைச் சிறையினின்று விடுவித்து விடுவதா தங்களுக்குப் பெரிய காரியம்?'' என்றாள்.

அக்கன்னிகை கூறியதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பைரவி கிருஷ்ணப்பன் "புனிதவதியம்மாள் கூறுவது யாவும் உண்மையே. தாங்கள் அவ்வளவு உதவிசெய்யலாகும்'' என்றான்.

நகர அதிகாரி சாந்தமாகவும் இரக்கத்தோடுமே விடையளிக்கத் தொடங்கி "அய்யா! இக்கன்னிகைகள் விஷயத்தில் நான் மிக்க பரிதாபப்படுகிறேன். இது மட்டுமல்ல, தைரியநாதம் பிள்ளை எனக்கு மிக்க அறிமுகமான நண்பராக விராவிட்டாலும் அவரைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிற வரையில் அவர் விஷயத்தில் மிக்க உயர்வான மதிப்பே வைத்திருக்கிறேன். ஆயினும் இத்தகைய சந்தர்ப்பத்தில் ஊருக்கே கெடுதி விளைவிக்கத்தக்க ஒரு மனிதனைச் சிறையிலிருந்து வெளியில் விட்டுவிடும் விஷயத்தில் எத்தகைய மனிதருடைய ஆபத்தையும் நான் கருதுவற்கில்லை. இவ்விஷயத்தில் எனக்குச் சுயாதீனமில்லை. நான் அப்படிச் செய்வதாயின் எனக்கும் என் குடும்பத்

திற்குமே பெரிய ஆபத்தை யுண்டாக்கிக் கொண்டதாகும். ஏனெனில் நான் நாட்டிற்கே தீங்கிழைத்தவனுகவும் என் கடமையைச் செய்யத் தவறியவனுகவும் கருதப்படுவேன்" என்ருர்.

அவர் வார்த்தைகளைக் கேட்ட மீனுள் தன் தங்கையை நோக்கி ஒருவித வெறுப்போடும் மனவருத்தத்தோடும் பின்வருமாறு கூறினுள்:—

"நீ என்ன? புனிதம்! சத்தத் தீவிலுள்ள ஒரு சாதாரணமான அற்பமனிதனைப்பற்றி இந்தக் குறுக்குத்தீவு முழுமைக்கும் பிரதம அதிகாரியா யிருப்பவரிடம் பேசுகிருேம் என்பதைக் கவனிக்கவில்லை போலும். இத்தகைய பெரிய பதவியிலிருக்கும் ஒரு அதிகாரி எங்கேனும் அத்தகைய அற்பமனிதன் விஷயத்தை யொருபொருளாக மதிப்பாரோ? நீ பைத்தியக்காரியே. அவரிடம் கோரப்பட்ட நிபந்தனைகளைப்பற்றி சிந்திக்கவேண்டிய காலம் பின்னுல் வரும். ஏனெனில் கடைசியில் அவர் அதன்படி நடப்பார். நடந்தே தீரவேண்டும்" என்ருள்.

நகர அதிகாரி:—"குழந்தாய்! நீ என்மேல் கோபம் கொள்ளலாம். ஆனுல் நான் உன்மேல் கோபிக்கலாகாது. உன் தந்தை பாதி எங்கள் ஊராரே. ஏனெனில் எங்கள் எல்லையில் அவருக்குப் பூஸ்திதியிருக்கிறது. நண்பர்களுமிருக்கிருர்கள. ஆகையால் எங்கள் ஊரார் ஆபத்தில் சிக்கிக்கொண்டால் நாங்கள் எப்படி நடந்து கொள்வோமோ அப்படியேதான் அவர் விஷயத்திலும் நடந்து கொள்வோம். நீங்கள் என் வீட்டில் வந்து என் மனைவியோடு கூட வசிப்பதாயின் உங்கள் விஷயத்தில் நாங்கள் எவ்வாறு நடந்து கொள்வோமென்பதைக் காட்டக்கூடும்" என்ருர்.

மீனுள் அவர் கூறியதற்கு விடையளிக்க மயங்கினுள்.

ஆனால் புனிதவதி உடனே மரியாதையாகவே "அய்யா! இங்கு எங்கள் சுற்றத்தைச்சேர்ந்த ஒரு கைம்பெண் மூதாட்டி இருக்கிறார்கள். அந்தம்மாள் எங்கள் வரவை யெதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள். ஆயினும் தங்களு டைய அன்பிற்காக நாங்கள் மிக்கவந்தன முடையவர்களா கவே யிருக்கிறோம்" என்றாள்.

பைரவி கிருஷ்ணப்பன் மறுபடி நகர அதிகாரியை வேண்டிக்கொண்டு பார்த்தான். ஆனால் அவர் இணங்கு வதாயில்லை. அவர் சாந்தமாகவே கிருஷ்ணப்பனை நோக்கி, "அய்யா! இங்குள்ள பெரிய துரைத்தன அதிகாரி முன் னமே யென்னைப் பயமுறுத்தியிருக்கிறான். ஏனெனில், நான் அக் கள்ளரோடு சினேகபாவமாக நடந்து கொண்டதாகவும், அவர்களோடு சமாதானம் செய்து கொள்ள முயன்றதாகவும் அதற்காக என்னைப்பற்றி மேல் அதிகாரிகட்குத் தெரிவிக்கப் போவதாகவும் எனக்கு எச் சரிக்கை செய்திருக்கிறான். இப்போது என்னிடம் சிக்கி யிருக்கும் அக்கள்ளத் தலைவனை நான் விட்டுவிடும் பட்சத் தில் எனக்கு மிக்க ஆபத்துண்டாகும்படி அவன் செய்து விடலாகும். உண்மையில் எனக்குத் தைரியநாதம் பிள்ளை யின் விஷயத்தில் மிக்க அனுதாபமே யிருந்தாலும் நான் அத்துமீறி நடக்கக்கூடாதவனாக விருக்கிறேன்" என்று கூறினார்.

அதன் பிறகு நகர அதிகாரி தமக்கு அவசரமான வேறு வேலை யிருப்பதாகக் கூறி அந்த விடத்தைவிட்டு முன்னே யிருக்கும் கூடத்திற்குச் சென்றார். செல்லும் போது அவ்விஷயம் இன்னதென்று அவர் கூறினார். அதா வது ஜலபுரத்திலுள்ள முருகப்பன் என்பவர் தன் உடை களைக் களவாடுவதற்கு ஹாக்கர் சுந்தரம்பிள்ளை என்பவன் தன் வேலையாளுக்கு உதவி செய்ததாக அவன்மேல் பிராது

கொண்டு வந்திருக்கிறார். அந்தவேலையாளிடம் தான் தன் விலையுள்ள உடை முதலியவற்றைப் பாதுகாப்பிற்காகக் கொடுத்திருந்ததாகவும் அதை யவன் அவனிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டதாகவும் பிராது கொடுக்கப்பட்டிருக்கிறது.

இச்சங்கதிகளைக் கேட்டபோது இரண்டு சகோதரிகளுக்கும் முருகப்பன் என்றபெயர் ஒன்றைத் தவிர மற்ற எந்த விஷயத்திலும் மனம் உறுத்தவில்லை. மீனாள் தான் முதலில் முருகப்பனிடம் நட்புகொண்டிருந்ததும் பிறகு தான் அவனை மறந்து விட்டு அதாவது அவன் நட்பை யலட்சியம் செய்துவிட்டு குலசேகரன் மேல் மயல் கொண்டு அவன் காதலை யேற்றுக்கொண்டதும், குலசேகரன் முருகப்பனுக்குத் தீங்கிழைத்ததும் யாவும் அவள் மனதில் ஏககாலத்தில் தோன்றின. அவள் மனதில் ஒரு ஈட்டி பாய்ந்ததுபோலிருந்தது.

புனிதவதியின் மனதில் மிக்க வியாகூலம் உண்டாயிற்று. அவள் கண்களில் நீர் ததும்பியது. ஆனால் சீக்கிரத்தில் அதிகாரி கூறியது முருகப்பனைப்பற்றியல்லவென்றும் அவன் தந்தையைப்பற்றி யென்றும் தெரிய வந்தது. அதன் பிறகு கன்னிகைகளுக்கு அவ்விஷயத்தில் சிரத்தையில்லையாகையால் உடனே விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள்.

அவர்கள் தங்கள் சுற்றத்தாள் வீட்டிற்குச் சென்றதும், மீனாள் குலசேகரன் எத்தகைய சிறையிலிருக்கிறான் என்பதை யறிய முயன்றாள். அவள் மிக்க தந்திரமாகத் தான் ஏதோ ஆலோசனையோடு கேட்பதாகப் பிறர் அறியாவண்ணம், சாதாரணமாக வெளி விவகாரங்களைப்பற்றிப் பேசுகிறவள் போலும் உண்மையில் அவ்விஷயத்தைப்

பற்றிச் சற்றும் அக்கரையில்லாதவள் போலும் அவனைப் பற்றிய விஷயங்களை விசாரித்தாள்.

குலசேகரன் சிறை வைக்கப்பட்டான் என்றால் சரியான சிறையில் அவன் வைக்கப்படவில்லை. அவன் இருக்கும் இடம் இராஜமாளிகையென்ற பெயருடையது. அது ஒரு பாதுகாப்பானவிடம். அதற்குள் சிறுதோட்டமுமுண்டு. குலசேகரன் அதன் மத்தியிலுள்ள ஒரு அறையில் வசித்துக்கொண்டிருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவன் சாதாரணமாய் அங்குள்ள தாழ்வாரம் கூடம் தோட்டம் இந்த விடங்களில் உலவலாம். அந்த எல்லையைக் கடந்து அவன் செல்லலாகாது. ஏனெனில் அதற்காகச் சரியான ஆட்கள் காவலாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இவனையறியாமலே எப்போதும் இவன்மேல் கண் வைத்திருக்கிறார்கள். இரவில் இவன் இருக்கும் அறை வெளியில் பூட்டப்படும். இவன் குறித்த எல்லையைக் கடந்து செல்வதாயின் பலவந்தமாய் இவனைத் தடுத்து நிறுத்தும்படி அக்காவலருக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் குலசேகரனுடைய தைரியம், துணிகரம், அவனுக்கு இருக்கும் ஆட்பலம் இவற்றால் பீதியடைந்த பிரதம துரைத்தன அதிகாரி அவனைப்பற்றி நகர அதிகாரிக்கு எச்சரிக்கை செய்தார். நகரிலுள்ள பிரமுகர்களில் பெரும்பாலோரும் அவ்வாறே கூறினார்கள். அதாவது அத்தகைய கள்ளத்தலைவனை யப்படி சுயாதீனமாக விட்டிருப்பதற்காக நகர அதிகாரியைக் கண்டித்துக் கூறினார்கள்.

குலசேகரனுக்கோ பகிரங்கமான எந்த விடத்திற்கும் செல்லப்பிரியமில்லை. ஏனெனில் யாவரும் தன்னை வெறுக்கிறார்களென்றும் தன் பெயரைக் கேட்டதே நடுங்குகிறார்களென்றும் தெரிந்துகொண்டான். ஆகையால் இவன்

விசேஷமாய் உலவச்செல்வது அங்குள்ள பெரிய கோயி லின் வெளிப்பிரகாரணங்களிலேயே. அக்கோயிலின் கிழக் குப் பாகம் மட்டுமே ஜனங்கள் சென்று கடவுளை வணங்கு வதற்குத் தகுதியானதாகவிருக்கிறது. மற்ற பாகம் முன்பு அங்கு நடந்த பெரிய மதக்கலகத்தால் பாழ்ப்பட் டிருந்தன. அந்த இடத்திற்கும் கோயிலின் மற்றபாகத் திற்கும் இடையில் ஒரு திரைபோன்ற மெல்லிய சுவரே யிருக்கிறது.

கோயிலின் இந்த வெளிப்பாகத்தில்தான் குலசேக ரன் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. காவலர் கள் அக்கோயிலுக்குள் நுழையும் சிறு வாயிற்படியைக் கவனித்துக் கொண்டிருந்தால் கொஞ்சமும் கஷ்டமின்றி அவன் தப்பித்துக்கொண்டு போகாமல் கவனித்துக் கொள்ளமுடியும். அவன் துயரத்தோடிருக்கும் அந்த நிலைமையில் அந்தவிடமே அவனுக்கு நிம்மதியாயிருந்தது. அவன் உலவிக் கொண்டிருக்கும் வெளிப்புறத்தின் எதிரில் சில பிரமுகர்களுடைய கல்லறைகளிருந்தன.

இந்த இடத்தில் குலசேகரன் தன் வாழ்நாளில் கடந்த காலத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே உலவிக் கொண்டிருந்தான். தன் வாழ்நாள் திடீலென்று அவமான மான முடிவிற்கு வரும் என்று அவன் புத்தியிற்பட்டது. "இந்த யௌவன வயதிலேயே நாம் இத்தகைய முடிவை யடைய வேண்டிவரும். இதோ புதைக்கப்பட்டிருக்கிற வர்களில் நானும் ஒருவனுகக் கணக்கிடப்படுவேன். ஆனால் என் சவத்தினருகில் எந்தக் குருவும் பிரார்த்தனை செய்யமாட்டான். என் கல்லறையின்மேல் யாரும் என் பெயர் செதுக்கப்பட்ட கல்லை நாட்டமாட்டார்கள். என் சவம் எங்கேனும் கடற்கரையில் அல்லது மைதானத்தில் தூக்குமரத்தில் தொங்கவிடப்பட்டு உலரும். கப்பல்கள்

அவ்வழியே செல்லும்போது முதியோர் அதைப்பார்த்து என் பெயரைக்கூறி இளையவர்களுக்கு எச்சரிக்கை செய்வார்கள். ஆனால் ஓ மீனா! மீனா! அத்தகைய சமாசாரம் உன் செவிக்கெட்டும்போது நீ என்ன நினைப்பாய்? ஓ கடவுளே! அத்தகைய சங்கதிகள் அவள் செவிகளுக்கெட்டாவண்ணம் கடலிலேயே மறைந்திவிட வேண்டும். அந்தோ! நாம் சந்திக்காமலேயிருந்திருக்கலாகாதா. நாம் இனி மறுபடி சந்திக்கப்போகிறதென்னமோ இல்லை" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

குலசேகரன் அவ்வாறு குனிந்தபடி சிந்தித்துக் கொண்டே உலவியவன் தலை நிமிர்ந்தபோது மீனாள் தன் எதிரில் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டுவிட்டான். முதலில் அவன் "நாம் இந்நேரம் இவளைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தபடியால் நமது மனோபாவமே யிவ்வாறு தோன்றுகிறதோ" என்று எண்ணினான். பிறகு உற்றுநோக்கினான். மீனாளுடைய முகம் வெளுத்து வாட்டமடைந்திருந்தது. அவளுடைய கூந்தல் நலங்கியிருந்தது. ஆயினும் அவள் பார்வைமட்டும் உறுதியாகவும் சாந்தமாகவும் இருந்தது. அவள் முகத்தில் துயரம் தோன்றினும் அதுவும் ஒருவிதக் கம்பீரமான துயரமாகவேயிருந்தது. அவள் கப்பலைவிட்டுப் புறப்பட்டபோது அணிந்திருந்த அதே போர்வையை யிப்போது மணிந்திருந்தாள்.

அவளைக் கண்டதே குலசேகரனுக்கு முதலில் மிக்க வியப்பேயுண்டாயிற்று. பின்னால் அதிக சந்தோஷமுண்டாயிற்று. ஆயினும் அச்சந்தோஷத்தில் துயரங் கலக்காமலில்லை. அவன் மனோ நிலைமை யப்போதிருந்த மாதிரிக்கு அவன் உடனே அவள் பாதங்களில் விழுந்து விட்டிருப்பான். ஆனால் அதற்குள் மீனாள் தன் மூக்கின்மேல் விரலைவைத்து அவனைப்பேசாமல் பொறுமையாயிருக்கும்

படி சமிக்கைசெய்தாள். அவள் தாழ்ந்த குரலாய் "ஜாக்கிரதையாயிரு; வெளியில் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கவனிக்கிறார்கள். மிக்க கஷ்டத்தோடு உன்னைக்காண எனக்கு அனுமதியளித்தார்கள். நான் நெடுநேரம் இங்கிருக்க முடியாது. அவர்கள் என்ன நினைப்பார்கள்? ஓ கடவுளே அவர்கள் நினைப்பார்கள். அடடா! உன்னைத் தப்பவைக்க நான் எவ்வளவோ தியாகம் செய்யவேண்டியிருந்தது. துணியவேண்டியிருந்தது" என்றாள்.

குலசேகரன் அவள் வார்த்தைகளைக் கேட்டதே சொல்லொணுவியப்பும், துயரமும் சந்தோஷமுமடைந்தான். ஒரு பெண்பால் இவ்வளவு துணிகரமாய்த் தன்னைக் காப்பாற்ற வந்ததைக் கண்டு வியப்பும், நம்மால் நிம்மதியோடிருந்த இப்பெண் இத்தகைய இடுக்கண்களுக்கெல்லாம் உள்ளாக நேர்ந்ததே யென்று விசனமும், நாம் எப்படியும் இனி தப்பப்போவதில்லையென்று சற்று முன்பு எண்ணியதற்கு இப்போது தப்பித்துக்கொள்வோம் போல் காண்கிறதே என்று சந்தோஷமுமடைந்தான்.

அவன் வியப்போடு அவளைநோக்கி "என்னைக் காப்பாற்றவா? அந்தோ மீனு! என்னைக் காப்பாற்றுவது முடியாத காரியம். கடைசியாக உன்னிடம் விடை பெற்றுக்கொள்வதற்காகவேனும் இப்போது உன்னைக்கண்டதேபோதும்" என்றான்.

மீனுள் "வினையின்படிக்கும் நீ செய்த குற்றங்களாலும் நாம் இனிச்சந்திக்காமல் பிரிந்துவிடவேண்டியதென்னமோ உண்மையே. ஓ! நான் உன் கூட்டாளிகளைக் கண்டேன். நான் இன்னும் அதிகமாக உனக்குக் கூறவேண்டுமோ. இப்போது ஒரு கப்பற்கொள்ளைக்காரன் என்றால் என்னவென்று நான் தெரிந்துகொண்டேன் என்பதையும் நான் கூறவேண்டுமா?" என்றாள்.

குலசேகரன் மனவேதனையோடு திடுக்கிட்டு, "அம் முரடர்கள் கையில் நீங்கள் சிக்கியிருந்தீர்களோ? அவர்கள் அவ்வளவு தைரியத்தோடு——" என்றான்.

மீனாள்:—"அவர்கள் துராக்கிரதமாக ஏதும் செய்யவில்லை. உன் பெயர் அவர்களிடம் ஒரு மந்திரம்போல் பீதியையுண்டாக்கிற்று. உன் பெயரே எங்களுடைய விடுதலைக்குக் காரணமாகவிருந்தது" என்றாள்.

குலசேகரன்:—"அது உண்மையே. என் விஷயத்தில் அவர்களுக்கு எப்போதுமே நடுக்கம். ஆ! அவர்கள் மட்டும் உங்களுக்குக் கெடுதியேதேனும் செய்யத் துணிந்திருந்தால்—அடடா! நான் என்ன மூடன். இங்கு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கையில் வீண் பெருமை கூறுகிறேனே" என்றான்.

மீனாள்:—"இல்லை. இனியும் நீ சிறையிலிருக்கலாகாது. உடனே நீ விடுதலையடையவேண்டும். என் தந்தையையுனக்கு ஈடாக உன் கூட்டாளிகள் எங்கள் கப்பலோடு பிணையாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று தாங்கள் கப்பலில் வந்துகொண்டிருந்ததும் கள்ளருடைய கப்பல் தங்கள் கப்பலைப் பிடித்துக் கொண்டதும், பிறகு அனந்தன் தன்னையும் தன் தங்கையையும் விடுதலை செய்தனுப்பியதும் பைரவி கிருஷ்ணப்பன் நகர அதிகாரிகளுக்குக் கடிதம் வரைந்ததும் தாங்கள் அதிகாரியைக் கண்டு பேசியதற்கு அவர் கூறிய பதிலும் யாவும் சுருக்கமாகக்கூறி "இனி என் தந்தையைக் காப்பாற்றுவதற்கேனும் நீ விடுதலையடையவேண்டியது அவசியமே" என்றாள்.

குலசேகரன்:—"ஆம். ஆனால் அதற்கு மார்க்கம்தான் இல்லை" என்றான்.

மீனாள்:—"அப்படியல்ல. கொஞ்சம் தைரியத்தோடு மட்டும்

நடந்து கொண்டால் நீ சுலபமாகவே தப்பித்துக் கொள்ளலாம். துணிகரமாக நான் கூறுகிறபடி நட. என் மேல்உடையை யணிந்துகொண்டு சற்று துவண்ட நடையோடு மட்டும் நேராகச்சென்றுவிடு. காவலர் நான்றான் திரும்பிச் செல்கிறேன் என்றெண்ணிப் பேசாமலிருப்பார்கள். நான் அவர்களுக்குச் சாராய மும் சிற்றுண்டிகளும் தாராளமாகக் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். அவர்கள் மும்முரமாய்க் குடித்துக்கொண் டிருக்கிறார்கள். உன்னைச் சரியாய்க் கவனிக்கமாட்டார்கள். அதோடு பொழுதும் இருள் சூழ்ந்து வருகிறது. நீ யுடனே என் போர்வையை யணிந்துகொண்டு இதைவிட்டு வெளிப்பட்டுப் பெரிய பாலத்தினோரத்திலிருக்கும் குன்றுகளிலுள்ள குகை களிலொன்றில் விடியற்காலமட்டும் ஒளிந்திரு. விடி யற்காலத்தில் பூமி இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கடலுக்குள் செல்லுமிடத்தில் பெரிய பாலத்தின் முனையில் தீ மூட்டு. அந்த விடத்திலிருந்து சமீபத்தி லேயே உன் கப்பல் இருக்கிறது. உன் தீயைக் கண் டதே உன் கப்பலிலிருந்து உனக்காகப் படகு அனுப் பப்படும். அம்மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. இன்னும் ஒரு விநாடிகூட நிதானிக்கவேண் டாம்'' என்றாள்.

குலசேகரன்:—“ஆனால் மீனா! நீ....நீ....இந்த ஏற்பாடு ஜெயமடைந்தால் உன் சங்கதி யெப்படியாகும். நீ எப்படி தப்பித்துக் கொள்வாய்?'' என்றான்.

மீனாள்:—நீ தப்பித்துக்கொண்டு போவதில் என்பாகத்தில் உள்ள குற்றத்திற்கு என்னுடைய நல்லெண்ணமும் கடவுளின் மன்னிப்பைப் பெறச்செய்யும். நான் என்

தந்தையைக் காப்பாற்றுவதற்காகவே நீ தப்பித்துக் கொண்டுபோக உதவி செய்தேனென்ற விஷயம் மனிதர் என்னை மன்னிக்கும்படி செய்யும்.

குலசேகரன் சகோதரிகள் தப்பித்துக்கொண்டதற்காகக் கடவுளை வாழ்த்தி விட்டு "ஆம். உன் தந்தைக்காகவேனும் நான் கட்டாயம் தப்பித்துக்கொண்டு போகவேண்டியதே. எனக்காக அவர் ஆபத்தில் சிக்கிக்கொண்டு துன்பமடைவதாயின் நான் ஆண்டவனுக்குப் பதில் கூறவேண்டும்" என்றான்.

58-வது அத்தியாயம்

கடைசியில் குலசேகரன் தன் காதலியை நோக்கி "சரி இங்கு நாம் பிரியவேண்டியதே. ஆயினும் கடைசியாக வல்லவென்று நினைக்கிறேன்" என்றான்.

அச்சமயம் "கடைசியாகவே" என்று ஒரு சத்தம் எங்கோ ஒரு மூலையிலிருந்து வருவதுபோல் தோன்றியது. அதைக் கேட்டதே இருவரும் திடுக்கிட்டு நாற்புறங்களிலும் மிரட்சியோடு பார்த்தார்கள். ஒருசமயம் நாம் கூறியதே இக்கட்டிடத்தின் அமைப்பால் பிரதித்தொனியுண்டாகி நமக்குக் கேட்டதோ வென்று குலசேகரன் கருதினான். ஆனல் மனிதரின் குரல் தெளிவாய்க் கேட்டது.

இவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் மிரண்டு நோக்கிக்கொண் டிருக்கையில், அக்கோயிலிலுள்ள பிரம்மாண்டமான தூண்களில் ஒன்றின் பின்னலிருந்து நாகம்மாள் வெளிவந்து "ஆம். கடைசியாகவே" என்று கூறினள். அவ்வாறு கூறிவிட்டு "இங்கே சிவந்த பாதங்

களும் சிவந்த கரமும் சந்திக்கின்றன. அந்தச் சிவப்பு இரத்தம் எங்கிருந்து வந்ததோ அந்தக் காயம் ஆறிவிட்டது இருவர்க்கும் நற்காலமாயிற்று. இருவர்க்கும் நலம். முக்கியமாய் இரத்தம் வரும்படி செய்தவனுக்கு. சரி இங்கே நீங்கள் சந்திக்கிறீர்கள். ஆனால் கடைசிதரமாகச் சந்திக்கிறீர்கள்'' என்றாள்.

குலசேகரன் மீனாளின் கரத்தைப்பற்றுபவன் போல், "அப்படியல்ல. நான் உயிரோ டிருக்குமட்டும் மீனாளை விட்டு என்னைப் பிரித்து விடுவதாயின் அந்த வேலை மீனாளாலேயே ஆகவேண்டும்'' என்றான்.

நாகம்மாள் அவர்கள் மத்தியில் போய் நின்று, "இத்தகைய வீண் முட்டாள் தனத்தை விட்டுவிடுங்கள். மறுபடியும் சந்திப்போம் என்ற வீணான வீண் கனவை வைத்துக்கொண் டிருக்கவேண்டாம். இராஜாளி புறாவோடு ஜதை கூடாது. குற்றம் நிரபராதத் தன்மையோடு பொருந்தாது. "ஓ மீனா! நீ கடைசித் தடவையாக இத்தைரியவானான குற்றவாளியைப் பார்க்கிறாய் "குலசேகரன்! நீ கடையாக இந்த மீனாளைப் பார்க்கிறாய்'' என்றாள்.

குலசேகரன் கோபத்தோடு, "உன் மோசடிகள் என் மனதில் உறுத்துமென்று கருதுகிறாய்? உன் தந்திரங்களையுணராமல் அவற்றில் ஏதோ அபூர்வசக்தியிருக்கிறதென்று கருதுகிற மூடர்களில் என்னை யொருவனாகக் கருதாதே'' என்றான்.

மீனாள் குலசேகரனை நோக்கி "பேசாமல் பொறுமையாயிரு. பொறுமையாயிரு. ஓ! பேசாமலிரு. இவள் வல்லமையுடையவள். மிக்க அளவு கடந்த சக்தியுடையவள்.

ஓ! நாகம்மா! என் தந்தையின் க்ஷேமம் இந்த ஆளின் க்ஷேமத்தைப் பொறுத்ததாக விருக்கிறது என்பதை மனதில் வை" என்றாள்.

நாகம்மாள்:—"நான் அதை மனதில் வைத்திருப்பது குலசேகரனுக்கு நல்லதே. அதோடு ஒரு ஆளுக்காக உங்கள் இருவரையும் காப்பாற்ற நான் இங்குவந்தேன்? உன் விளையாட்டுத்தனமான உதவி இவனுக்கு எவ்வளவு வரையில் உறுதியான பாதுகாப்பாகும். உன்மேல் உடையொரு பாதுகாப்பாகுமோ. சொல்ப நேரம் இவன் அறைக்குப் பூட்டில்லாமலிருக்கலாகும். நான் இவனை இவன் கப்பலில் கொண்டுபோய் க்ஷேமமாக ஏற்றிவிடுகிறேன். ஆனால் இவன் இப்பிரதேசங்களை விட்டுத் தூரதேசத்திற்கு எங்கேனும் போய் இவனுடைய கறுப்புக்கொடியையும் குற்றத்தொழிலையும் கொண்டு காலத்தை யெப்படியேனும் கழிக்கட்டும். இன்னும் இரண்டு நாட்கள் இங்கிருந்தானே பிறகு இவன் உயிருக்கு நான் பொறுப்பாளியல்ல. இருவரும் ஒருவரை யொருவர் நோக்கிக் கடைசியாக விடை பெற்றுக் கொள்ளுங்கள்" என்றாள்.

மீனாள் குலசேகரனை நோக்கி "இவள் கட்டளைப்படி நடந்துகொள். மறுத்துக் கூறாதே" என்றாள்.

குலசேகன் மீனாளின் கரத்தைப்பற்றிக்கொண்டு முத்தமளித்து குசுகுசுவென்று "நான் விடைபெற்றுக் கொள்கிறேன். ஆனால் கடைசியாகவல்ல" என்றான்.

நாகம்மாள் "மீனாள்! இனி நீ போய் வீடுசேர். இவனை யென் பொறுப்பில் விட்டுவிடு" என்றாள்.

மீனாள் "அம்மா! ஒரே யொரு வார்த்தை மட்டும். முருகப்பன் சுகமடைந்து க்ஷேமமாக விருப்பது உண்

மையா? நீ கூறிய சங்கதியால் குறிப்பாக அப்படித்தோன்றியது'' என்றாள்.

நாகம்மாள்:—"ஆம். அவன் சுகமாகவே க்ஷேமமாயிருக்கிறான். இன்றேல் அவன் இரத்தத்தைச் சிந்தியவன் ஆபத்தை யடைந்திருப்பான். இனி நீ செல்'' என்றாள்.

மீனாள் உடனே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள். அவள் உள்வாயிற்படி யருகில் நின்று திரும்பிப் பார்த்தபோது நாகம்மாள் உருவமும், போர்வீரன்போன்ற குலசேகரன் உருவமும் மெதுவாய் நகர்வதுபோல் தோன்றின. இன்னும் சற்றுதூரம் சென்று பார்த்தபோது இரண்டுருவங்களையும் காணோம். அவை மீனாளின் கண்களுக்கு மறைந்து விட்டன. அவர்கள் கோயிலின் உட்பக்கமிருந்த ஒரு பெரிய தூணின் பின் சென்றதாகமட்டும் தெரிந்தது. மற்றபடி எப்பக்கம் சென்றார்களென்பது தெரியவில்லை.

மீனாள் தான் உள்ளே வந்த கிழக்கு வாயிற்படி வழியே மெதுவாய்ச் சென்றாள். அவள் காவலர்கள் இருக்குமிடத்தை நெருங்கும்போது அவர்கள் பேசும் சத்தம் கேட்டது. நின்று உற்றுக்கேட்டாள். ஒருவன் "அந்தச் சத்தத்தீவுப் பெண் நெடுநேரம் அக்கப்பற்கொள்ளைக்காரனிடம் பேசிக்கொண்டிருக்கிறாள்'' என்றான். மற்றொருவன் "அவள் தன் தந்தையின் மீட்பு விஷயத்தைத் தவிர வேறெதைப்பற்றியும் பேசமாட்டாளென்று கருதுகிறேன்'' என்றான். மற்றொருவன் "ஆ! மெய்யாகவே கூறுகிறேன். இப்பெண்கள் ஒரு வயோதிகமான நகரப் பெரிய மனிதனைவிட வாலிபனாகிய அழகுடைய ஒரு கள்

ளன் விஷயத்திலேயே அனுதாபம் காட்டுவார்கள்" என்றான்.

மீனாள் அவர்கள் முன் சென்றதே, அவர்கள் சம்பாஷணை நின்று விட்டது. அவர்கள் அவளுக்கு வந்தனமளித்து நின்றார்கள். மீனாள் அங்கிருந்து நேராகத் தாங்கள் இறங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்றாள். அவள் மனதில் வியாகூலமிருந்தாலும் தன் காரியங்களால் கடைசியில் தன் தந்தைக்கு எப்படியாயினும் விடுதலையுண்டாகுமென்று ஒரு பக்கம் மனோ நிம்மதி யடைந்தாள். அதோடு குலசேகரன் தப்பித்துக் கொண்டு போய்விடுவான் என்ற நம்பிக்கையும் அவளுக்கு மனோ நிம்மதியை யுண்டாக்கிற்று.

மீனாளுக்கு முன்னமே நாகம்மாளின் அபூர்வ சக்திகளில் கொஞ்சம் நம்பிக்கையுண்டாதலால், இப்போது திடீலென்று அவள் அதிசயமான விதமாக அக்கோயிலில் தோன்றியது, அதிலும் அத்தகைய சமயத்தில் தோன்றியது அவள் விஷயத்தில் மீனாளுக்கு அதிக நம்பிக்கையும் அச்சமும் உண்டாகிவிட்டன. அதனாற்றான் அவள் நாகம்மாள் சொல்கிறபடி கேட்கும்படி குலசேகரனுக்குக் கூறினாள். வீட்டிற்குச் சென்றதும் அவள் நடந்த சங்கதியைத் தன் தங்கையிடம் விவரமாகக் கூறினாள். இரண்டு சமாசாரங்களையும் கேட்ட புனிதவதி மிக்க சந்தோஷமடைந்தாள். அவளுக்கு முன்னமே நாகம்மாளின் அபூர்வ வல்லமையில் கொஞ்சம் நம்பிக்கையுண்டு. இப்போது நாகம்மாள் இவ்வழியில் தன் வல்லமையை யுபயோகித்ததைப் பற்றி அவள் மிக்க சந்தோஷத்தை யடைந்தாள். இருவரும் ஒருவருக் கொருவர் சந்தோஷங்கொண்டாடிய

186521
சென்னை-600 005

பின் பேசிக்கொண் டிருந்தார்கள். அச்சமயம் பைரவி கிருஷ்ணப்பன் அங்கு வந்தான்.

கிருஷ்ணப்பன் முகத்தில் பீதியும் துயரமும் நிறைந் திருந்தன. அவன் அவர்களை நோக்கி "குலசேகரன் தான் இருந்த சிறைச்சாலையி னின்றும் தப்பித்துக்கொண்டு போய் விட்டான். நகர அதிகாரி மீனாள் அதற்கு உடந்தை யாக விருந்தாளென்று மிக்க மனவருத்தத்தோடு அதைப் பற்றி விசாரிக்க இங்கு வருகிறார்" என்றான்.

மீனாள் "என் தந்தையின் விடுதலைக்காகக் குலசே கரன் விடுதலை யடையவேண்டியது அவசியமாகவே யிருந் தது. ஆனால் அவன் என் உதவியால் தப்பித்துக்கொண்டு போகவில்லை" என்றாள். அவர்கள் பேசிக்கொண்டே யிருக் கையில் நகர அதிகாரி யங்குவந்து விட்டார். அவர் அவ் விஷயத்தைப் பற்றிக் கேட்டபோது மீனாள் தன் மனதி லுள்ளதைச் சற்றும் ஒளிக்காமல்,

"பெரியோரே! என் தந்தை பிராணபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார். அவர் விடுதலையடைவது என் பிரா ணனை விடச் சிறந்தது. குலசேகரன் விடுதலை யடைந் தாலன்றி என் தந்தை தப்பவழியில்லை. ஆகையால் அந்த ஆள் தப்பித்துக்கொண்டு போனது எனக்குச் சந்தோஷத் தையே யுண்டாக்குகிறது. ஆனால் நான் அந்த விஷயத்தில் அந்த ஆளுக்கு ஒரு உதவியும் செய்யவில்லை. நான் சிறைச் சாலையிலிருக்கும் காவலர்கள் எதிரிலேயே சென்றபடியே வெளியில் வந்தேன். ஆனால் நான் வரும்போது அவரோடு கூட ஒரு ஆள் இருந்தது. அந்த ஆளின் பெயரைக்கூற என்னால் முடியாது" என்றாள்.